பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 17 புதன்கிழமை (02.01.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 37

# மகேஸ்வரன் எம்.பி. படுகொலை!

# கோயிலுக்குள் வைத்துக் கோரம்!!

## புத்தாண்டு தினத்தில் தலைநகர் கொழும்பில் கொடூரம்



கொழும்பு, ஜனவரி 01

ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தியாகராஜா மகேஸ்வரன் (வயது 42) நேற்று புத்தாண்டு தினத்தில் கொழும்பு, கொட்டாஞ்சேனை, பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வழிபாட்டில் ஈடுபட்டிருந்தவேளை கோரமாகக் கொலைசெய்யப்பட்டார்.

இக்கொடூரச்சம்பவத்தில் ஆலயத்துக்குச் சென்ற பக்தர் ஒருவரும் பலியானார். அத்தோடு, ஆலயத்திலிருந்த இருந்த பன்னிரண்டு பக்தர்களும் காயமடைந்தனர். அவர்களில் சிலர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருக்கின்றார்கள்.

நேற்று புதுவருட நாளை முன்னிட்டு காலை 9 மணியளவில் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் தனது மகளுடன் மெய்ப்பாதுகாவலர்கள் சகிதம் கொட்டாஞ்சேனையில் உள்ள பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று வழிபாட்டில் கலந்துகொண்டார். ஆலய உள் பிரகார வீதியை மகேஸ்வரன் சுற்றி வந்துகொண்டிருந்த போது - முற்பகல்.9.55 மணியளவில் -அங்கு நின்ற துப்பாக்கிதாரி ஒருவர் அவரை நோக்கிச் சரமாரியாக துப்பாக்கிச்சூட்டை நடத்தினார்.

இதில் மகேஸ்வரனும் அவரது மெய்ப்பாதுகாவலர்கள் இருவரும், பன்னிரு பொது மக்களும் காயமடைந்தனர்.

மகேஸ்வரனையும் அவரது மெய்ப்பாதுகாவலர்களையும் அங்கிருந்தவர்கள் உட

(02 ஆம் பக்கம் பார்க்க)



ஆஸ்பத்திரியில் அவச சிகிச்சையின்போது

## துப்பாக்கிச் சூடு நடத்திய நபரும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில்

கொழும்பு, ஜன. 02

மகேஸ்வரன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியவர் என்று கருதப்படும் கொலையாளியும் படுகாயங்களோடு கைது செய்யப்பட்டிருக்கின்றார் என அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் மீது மகேஸ்வரனின் மெய்ப்பாதுகாவலர்கள் பதில் தாக்குதல் நடத்தினர் என்றும்-

அதில் படுகாயமடைந்த அந்த நபர் பலத்த காவலில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார் என்றும்-

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டிருக்கின்றன.

இந்த நபர் யாழ்ப்பாணம் குருநகரைச் சேர்ந்தவர் என்றும் அவரிடமிருந்து இரண்டு

(02 ஆம் பக்கம் பார்க்க)

### வியாழனன்று இறுதிக் கிரியைகள்

கொட்டாஞ்சேனை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் வைத்து நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்ட ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனின் இறுதிக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை

(02 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றவாளிகளைப் பிடிக்க உறுதி கூறுகின்றது அரசு

கொழும்பு,ஜன.02

மகேஸ்வரன் எம்.பியின் கொலையைக் கண்டித்துள்ள அரசு குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதாக உறுதியளித்துள்ளது.

அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இது குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களின் துயரங்களையும் அபிலாஷைகளையும் வெளிப்படுத்துவதற்காக ஜனநாயக வழிமுறையைத் தெரிவு செய்த மகேஸ்வரன், பிரச்சினைகளுக்கு ஜனநாயக வழிமுறைகள் ஊடாக தீர்வுகாண வேண்டும் என்று விரும்பும் அனைத்து இலங்கையர்களினதும் மதிப்பையும் பெற்றவர் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினராக விளங்கிய போதிலும், விடுதலைப் புலிகளின் பிடிவாதமான நடவடிக்கைகளால் பெருமளவு

(02 ஆம் பக்கம் பார்க்க)

## தமது நெருங்கிய நண்பரின் மறைவு என ஜனாதிபதி ராஜபக்ஷ ஆழ்ந்த கவலை

கொழும்பு, ஜன. 02

மகேஸ்வரன் கொலை செய்யப்பட்டமைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடுமையான கண்டனம் தெரிவித்துள்ளார் என அவரது செயலக செய்திக்குறிப்பு ஒன்று தெரிவித்துள்ளது.

சம்பவத்தோடு தொடர்புடைய சகல சந்தேக நபர்களையும் உடனடியாகக் கைது செய்து சம்பந்தப்பட்ட விசாரணைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி பொலிஸ்மா அதிபருக்கு உடனடியாகவே உத்தரவு பிறப்பித்தார். அதன் பிரகாரம் தற்சமயம் கைது செய்யப்பட்ட ஆள்கள் தொடர்பாகக் குற்றப் புலனாய்வுப் பொலிஸார் விரைவான - விரிவான - விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அரசியல் ரீதியில் எவ்வித கருத்து கொண்டிருந்தாலும் நாடாளுமன்றுக்குளும் அதன் வெளியிலும் தனது நெருங்கிய அரசியல் நண்பனாக விளங்கிய நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன், தமிழ் மக்களின் தேவைகள் தொடர்பாக அடிக்கடி தன்னோடு கருத்துப் பரிமாறிக்கொண்ட விதத்தை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, அவரது மறைவு தங்கள் அனைவருக்கு

(02 ஆம் பக்கம் பார்க்க)

## மகேஸ்வரனின் கொலை குறித்து இந்தியாவில் அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் ரணில் பேச்சு

கொழும்பு,ஜன.02

எமது நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் படுகொலைசெய்யப்பட்டமை தொடர்பில் நான் இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் கலந்துரையாடியிருக்கின்றேன்.

- இவ்வாறு இந்தியா, புதுடில்லியிலிருந்து இன்று அவசரமாக நாடு திரும்பும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கிருந்து விடுத்த செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் குறித்த பூரண பொறுப்பை அரசும், பாதுகாப்புச் செயலருமே ஏற்கவேண்டும். கடந்த

(02 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தப் படுகொலைக்கு அரசே முழுப் பொறுப்பு

### ஐக்கிய தேசியக் கட்சியின் செயலர் சீற்றம்

கொழும்பு, ஜன. 02

மகேஸ்வரனின் படுகொலைக்கு மஹிந்த ராஜபக்ஷவின் அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்கா தெரிவித்துள்ளார்.

மகேஸ்வரன் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்றும் அரசு தமக்கு உரிய பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாகவே கூறியிருந்தார்.

ஆனால் யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளாத மஹிந்த ராஜபக்ஷவின் அரசு மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை நீக்கி அவரை ஆபத்தில் ஆழ்த்தியது.

பாதுகாப்பைக் குறைத்து கொலைஞர்களுக்கு வழி சமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. மகேஸ்வரனின் படுகொலைக்கு ஒரு வழியில் அரசும் உடந்தையாகி உள்ளது எ

(02 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கோயிலில் நடந்த கோரச் சம்பவத்தின் பதிவுகளில் சில....













## மட்டு. கொக்கட்டிச்சோலையில் பெருவாரியாக ஆயுதங்கள் மீட்பு

மட்டக்களப்பு, கொக்கட்டிச் சோலைப் பகுதியில் நேற்றுக்காலை விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் ஆயுதங்கள் பலவற்றை மீட்டிருக்கின்றனர் என்று தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் குறிப்பிட்டிருக்கிறது.

ரி - 56 ரகத் துப்பாக்கிகள் - 02, அதற்குப் பயன்படுத்தப்படும் ரவைகள் - 445, அதற்கான மகஸின்கள் - 05, கிளைமோர்க் குண்டுகள் - 03, 81 மில்லி மீற்றர் மோட்டார்க் குண்டுகள் - 18 மற்றும் 60 மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் - 19 போன்ற ஆயுதங்களையே விசேட அதிரடிப்படையினர் மீட்டிருக்கின்றனர் என்று ஊடக மத்திய நிலையம் மேலும் தெரிவித்திருக்கிறது. (க -03)

## குற்றவாளிகளைப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீமைகளை அனுபவித்துள்ள யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணத்தையும், உதவியையும் வழங்கும் அரசின் முயற்சிகளுக்கு அவர் ஆதரவு வழங்கியவர்.

மிகவும் துயரமான இந்தத் தருணத்தில் மகேஸ்வரனின் குடும்பத்தினருக்கு அரசு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவிப்பதுடன், இந்தக் கொடூரமான - கோழைத்தனமான - செயலுக்குக் காரணமானவர்களை நீதியின்முன் நிறுத்துவதற்குத் தீவிரமான முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் தெரிவித்துக்கொள்கிறது. - இப்படி அதில் கூறப்பட்டுள்ளது. (உ)

## மகேஸ்வரனின் கொலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிற்றுக்கிழமை தனியார் தொலைக்காட்சி ஒன்றில் வடக்கு - கிழக்கில் இடம்பெறும் படுகொலைகளுடன் தொடர்புடையவர்கள் குறித்த விவரத்தை அடுத்த நாடாளுமன்றில் அறிவிக்கப்போவதாகக் கூறியிருந்தார்.

அத்துடன் கடந்த வரவு - செலவுத் திட்ட விவாதம் மீதான வாக்கெடுப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மகேஸ்வரன் மற்றும் மனோகணேசன் ஆகியோர் அரசிற்கு எதிராக வாக்களித்த பின்னர் அவர்களுக்கான பாதுகாப்பு அரசினால் குறைக்கப்பட்டிருந்தது.

மேலும் இந்தக் கொலை தொடர்பில் நான் மிகவும் அதிர்ச்சியும் கவலையும் அடைந்ததுடன், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சருடன் இது குறித்து விரிவாகக் கலந்துரையாடியுள்ளேன். இச்சம்பவம் காரணமாக நான் அவசரமாக நாளை காலை (புதன்) நாடு திரும்புகின்றேன் - என்றுள்ளது. (அ)

## இந்தப் படு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. எனவே இப்படுகொலைக்கு அரசு பதில் சொல்லியாக வேண்டும்.

ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனக்குக் கொலை அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது, அரசு பாதுகாப்பு வழங்கவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து இரண்டு வாரங்களுக்குள் அவர் படுகொலை செய்யப்பட்டார் என்றால் அது ஜனநாயகத்திற்கு விடுக்கப்பட்ட ஓர் அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

அரசின் ஊழல், நிர்வாகச் சீர்கேடுகள், ஆட்கடத்தல்கள், சட்டவிரோதக் கொலைகள் போன்றவற்றை அம்பலப்படுத்தியதால் தான் அவரை கொன்று அகற்றுவதற்கு அரசு வழி செய்தது. ஆகவே இக் கொலைக்கு அரசே பொறுப்பு. - என்று திஸ்ஸ அத்தநாயக்கா மேலும் கூறினார். (உ - எ)

## தமது நெருங்கிய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்ட பாரிய இழப்பு என்றும் குறிப்பிட்டார்.

**யாழ்ப்பாணத்தில் நடைபெற்றதை நினைவுகூர்ந்தார்**

அரசியல் பணிகளுக்கு மேலாக வர்த்தக நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுவந்த மகேஸ்வரன், தனது கருத்துக்களை நேரடியாகத் தெரிவிப்பதற்கு பின்நிற்காது செயற்பட்டார் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தாம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த வேளையில் யாழ்ப்பாணத்தில் நிர்மாணிக்கப்பட்ட - பூசகர்களைப் பயிற்றுவிக்கும் - மத்திய நிலையத்தைத் திறந்து வைப்பதற்கு மகேஸ்வரனால் தான் இரு கிலோமீற்றர் தூரம் வரையில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்ட விதம் தொடர்பாகவும் ஜனாதிபதி சோகத்துடன் நினைவு கூர்ந்தார்.

அரசியல் தலைவர்களையும் பிரதிநிதிகளையும் கொலை செய்து அவர்களது கொள்கைகளையோ பயணத்தையோ மழுங்கடிக்க எந்தக் குழுவோ, கும்பலோ முயற்சிப்பதை ஜனநாயகம் மீது பற்றுள்ள எவரும் அனுமதிக்க மாட்டார்களென மேலும் தெரிவித்த ஜனாதிபதி, இந்தக் கொலைச் சம்பவத்தை அனைவரும் கண்டிக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினார்.

மகேஸ்வரனின் மறைவு தொடர்பான தனது ஆழ்ந்த கவலையை வெளியிட்ட ஜனாதிபதி, அன்னாரது குடும்ப உறுப்பினர்கள், இனத்தவர்கள் மற்றும் நண்பர்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்.

- இவ்வாறு ஜனாதிபதியின் ஊடக இணைப்பாளர் வெளியிட்ட அந்த அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ - ண)

## துப்பாக்கிச் சூடு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடையாள அட்டைகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன என்றும் கூறப்படுகின்றது. இவர் வத்தளையில் வசித்து வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனாலும் அவரின் பெயர் மற்றும் விவரங்கள் உத்தியோகபூவமாக வெளியிடப்படவில்லை.

அவரது யாழ். குருநகர் மற்றும் வத்தளை தரிப்பிடங்களை குற்றப் புலனாய்வுத் துறையினர் துருவி ஆராயவிருந்தனர் என்றும் ஒரு தகவல் தெரிவிக்கப்பட்டது.

இப்போது சந்தேகிக்கப்படும் நபர்தான் உண்மையான குற்றவாளியா, அவரை இச் செயலுக்குத் தூண்டிய சூத்திரதாரி யார் என்பன போன்ற விடயங்கள் இனிமேல் விசாரணைகளில்தான் தெரியவரும் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## வியாழனன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

பிரேத பரிசோதனைக்குப் பின்னர் நேற்று மாலை மகேஸ்வரன் எம்.பியின் பூதவுடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டு, பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது. இதன்போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது அஞ்சலியை அங்கு செலுத்துவார் என எதிர்பார்க்கப்பட்டது.

இன்றுஅவரது பூதவுடல் கொழும்பு - 06 வெள்ளத்தை 36 ஆம் இலக்க ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்கள் அஞ்சலியின் பின்னர் நாளை வியாழக்கிழமை பொரளை கனத்தை மயானத்தில் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை -

ஐ.தே.கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரனும், பிறிதொரு இளைஞரும் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான தகவல் அறிக்கை ஒன்றைக் கொழும்பு பிரதான நீதிமன்றில் கொட்டாஞ்சேனைப் பொலிஸார் நேற்றுப் பிற்பகல் சமர்ப்பித்தனர்.

கொலைகள் தொடர்பான மரண விசாரணைகள் கொழும்பு மேலதிக நீதிவான் ரவீந்திர பிரேமரட்ண முன்னிலையில் நடைபெற்றன.

சூட்டுச் சம்பவம் நடைபெற்ற பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்துக்கும் மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கும் நேரடியாகச் சென்று நீதிவான் விசாரணைகளை நடத்தினார்.

[illegible] இச் சம்பவம் தொடர்பான அரச பகுப்பாய்வுத் திணைக்களத்தின் அறிக்கை ஒன்றையும் சமர்ப்பிக்குமாறு அவர் பொலிஸாருக்குப் பணித்தார்.

## மகேஸ்வரன்எம்.பி......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னடியாக கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். காயமடைந்த பொது மக்கள் அருகிலிருந்த தனியார் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட பின்னர் கொழும்பு தேசிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

மருத்துவமனைக்கு மகேஸ்வரன் கொண்டு செல்லப்படும்போது மிகவும் ஆபத்தான கட்டத்தில் இருந்தார். அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும், மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டு சில நிமிடங்களில் - முற்பகல் சுமார் 10.15 மணியளவில் - அவர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மகேஸ்வரன் உயிரிழந்தமை தொடர்பாக கொழும்பு மருத்துவமனைப் பேச்சாளர் சொய்சா தகவல் வெளியிடுகையில் -

"மகேஸ்வரன் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மிகவும் ஆபத்தான நிலையிலேயே இங்கு கொண்டுவரப்பட்டார். அவரின் நெஞ்சுப் பகுதியில் பலகுண்டுகள் துளைத்திருந்தன. அவரது தலைப்பகுதியையும் குண்டுகள் துளைத்திருந்தன. அவருக்கு உடனடியாக சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. எனினும், அது பலனளிக்காது அவர் உயிரிழந்தார்" - என்றார்.

மகேஸ்வரன் உயிரிழந்த சிறிதுநேரத்தில் காயமடைந்து அனுமதிக்கப்பட்டிருந்த மற்றொருவரும், பொலிஸ் கான்ஸ்டபிளும் உயிரிழந்தார் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் ஹெக்டர் வீரசிங்க தெரிவித்தார். உயிரிழந்தவர் ஆலயவழிபாட்டுக்காகச் சென்ற யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்தவர் எனக் கூறப்பட்டது.

இச்சம்பவத்தில் காயமடைந்த பொது மக்களில் இருவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மகேஸ்வரன் தமது இளம் மனைவி மற்றும் குழந்தைகளான இரு மகள் மற்றும் மகன் ஆகியோரை விட்டுப்பிரிந்திருக்கின்றார்.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் 4 பெண்களும் சிறுவர் ஒருவரும் அடங்குவர் என வைத்தியசாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுட்டுக்கொலை செய்யப்பட்ட மகேஸ்வரன் எம்.பி. கடந்த 2004 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தின் போதும் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி உயிர்தப்பியிருந்தார்.

இவர் ஐ.தே.க. அரசில் இந்து கலாசார விவகார அமைச்சராக பதவி வகித்துள்ளார்.

கடந்த 11 நாட்களிற்கு முன்னர் மகேஸ்வரன் எம்.பியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களை 18இல் இருந்து இரண்டாக அரசு குறைத்திருந்தது. (அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - ஆஸ்திரேலியா 2ஆவது டெஸ்ட் இன்று

சிட்னி, ஜன.02

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி சிட்னியில் இன்று தொடங்குகிறது.

மெல்போண் டெஸ்ட் போட்டியில் படுதோல்வி அடைந்ததால் நெருக்கடியில் இருக்கும் இந்தியா இந்த டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

இந்தியா - ஆஸ்திரேலியா இடையிலான 4 போட்டிகள கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகிறது. மெல்போணில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் இந்தியா 337 ஓட்டங்கள் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் படுமோசமாக ஆடியமையால் 2 இன்னிங்ஸிலுமே இந்தியா 200 ஓட்டங்களுக்கு குறைவாகவே எடுத்தது. இதனால் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் கடுமையான விமர்சனத்திற்கு ஆளானார்கள்.

இந்திய வீரர்கள் போதிய பயிற்சி இல்லாமல் முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடியது இதற்கு ஒரு காரணமாக கருதப்பட்டாலும் ஆஸ்திரேலியாவின் வேகப்பந்து வீச்சை இந்திய வீரர்கள் திறம்பட எதிர்கொண்டு ஆடவில்லை என்பதே பரவலான கருத்தாக இருக்கிறது.



இந்நிலையில் 2ஆவது டெஸ்ட் போட்டி நாளை சிட்னி மைதானத்தில் தொடங்குகிறது. முதல் டெஸ்ட் போட்டி வெற்றி தந்த உற்சாகத்தில் இருக்கும் அஸ்திரேலியா, அணியில் எந்த மாற்றத்தையும் செய்யவில்லை. முதல் டெஸ்ட் போட்டியில் விளையாடிய அதே அணி சிட்னி டெஸ்ட்டிலும் விளையாட உள்ளது.

அதே நேரத்தில் நெருக்கடியில் இருக்கும் இந்தியா முக்கிய மாற்றங்களை பரிசீலித்து வருகிறது. தொடக்க ஜோடி சரியாக ஆடாதமையால் வீரேந்தர ஷேவாக் அணியில் தொடக்க வீரராக இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

யுவராஜ் சிங் இடத்தில் அவர் அணியில் இடம்பெறக் கூடும் என்று தெரியவருகிறது. ஷேவாக் தொடக்கக் வீரராக களமிறங்கினால் டிராவிட் 3ஆம் நிலையில் ஆடக் கூடும் என்று தெரிகிறது.

இந்திய அணித்தலைவர் கும்ளே மற்றும் துணை பயிற்சியாளர் ராஜ்புட் ஆகியோர் 2ஆவது டெஸ்ட் போட்டியில் இந்தியா சிறப்பாக விளையாடும் என்று உறுதி அளித்திருக்கின்றனர். துடுப்பாட்ட வீரர்கள் இந்த நம்பிக்கையை காப்பாற்றுவார்களா என்பதைப் பொறுத்தே இந்தியாவின் வெற்றி தோல்வி அமையும்.

மறுமுனையில் ஆஸ்திரேலியா மிகுந்த நம்பிக்கையுடனும் மனபலத்துடனும் களமிறங்குகின்றது.

## டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசை சங்ககார மீண்டும் முதலிடம்

டுபாய், ஜன.02

டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளின் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் இலங்கை அணி வீரர் சங்ககார மீண்டும் முதலிடம் பிடித்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொண்டிங் முதலிடத்தில் இருந்து வந்தார். தென்னாபிரிக்க வீரர் கலிஸ் 2ஆவது இடத்திலும் இலங்கை வீரர் சங்ககார 3ஆவது இடத்திலும் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்ட ஐ.சி.சி. தரவரிசைப் பட்டியலில் துடுப்பாட்டத்தில் மீண்டும் இலங்கை வீரர் சங்ககார (933 புள்ளிகள்) முதலிடம் பிடித்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் முடிவில் முதலிடம் பிடித்த சங்ககார பின்னர் அதனை இழந்தார். இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் ரிக்கி பொண்டிங் மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியதால் தர வரிசையில் அவர் சறுக்கல் கண்டுள்ளார். அவரது இடத்தை சங்ககார பெற்றுள்ளார்.

தென்னாபிரிக்க வீரர் கலிஸ் (923 புள்ளிகள்) 2ஆவது இடமும், ரிக்கி பொண்டிங் (917 புள்ளிகள்) 3ஆவது இடமும் பிடித்தனர். இந்திய வீரர்கள் யாரும் முதல் 10 இடங்களுக்குள் வரவில்லை.

பந்துவீச்சில் சாதனையாளராக விளங்கும் இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் (907 புள்ளிகள்) தொடர்ந்து முதலிடம் வகிக்கிறார். ஆஸ்திரேலிய வீரர் ஸ்ருவேட் கிளார்க் (822 புள்ளிகள்) தென்னாபிரிக்க வீரர் நிற்னி (795 புள்ளிகள்) 3ஆவது இடமும் இந்திய வீரர் கும்ளே ஓர் இடம் முன்னேறி 4ஆவது இடமும் பிடித்துள்ளனர்.

சகலதுறை வீரர்கள் வரிசையில் தென்னாபிரிக்க வீரர் கலிஸ் (537 புள்ளிகள்) முதலிடம் வகிக்கிறார். பிளின்ரொப் (இங்கிலாந்து) 2ஆவது இடமும், பொலக் (தென்னாபிரிக்கா) 3ஆவது இடமும், விக்ரோறி (நியூஸிலாந்து) 4ஆவது இடமும், சமிந்த வாஸ் (இலங்கை) 5ஆவது இடமும் வகிக்கின்றனர்.

## கிரிக்கெட் துளிகள்............

★ காய்ச்சலால் அவதிப்பட்டுவரும் சௌரவ் கங்குலி விரைவாகத் தேறி வருகிறார். இன்று ஆரம்பமாகும் சிட்னி டெஸ்டில் பங்குபற்றும் விதத்தில் இவர் முழுமையாகத் தேறிவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

★ யுவராஜ் சிங், சக வீரர்கள் இடையில் கருத்து வேறுபாடுகள் உள்ளதாக துணைப் பயிற்சியாளர் ராஜ்புட் தெரிவித்தாரெனச் செய்திகள் வெளியாகின. இத்தகவலை இந்திய அணி நிர்வாகம் மறுத்துள்ளது. அணியின் துணை முகாமையாள் ஸ்ரீதர் கூறுகையில், "ராஜ்புட் தவறாக எதுவும் தெரிவிக்கவில்லை. யுவராஜ் சிங் உடன் வீரர்களுக்கு எந்த பிரச்சினையும் இல்லை," என்றார்.

★ சுழற் படையுடன் ஆஸ்திரேலிய அணியை மடக்கத் திட்டமிட்டுள்ள இந்திய அணிக்கு 'இடி' வீழ்ந்துள்ளது. சிட்னி ஆடுகளம் வேகப்பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கும் என ஆடுகளப் பராமரிப்பாளர் டாம் பார்க்கர் தெரிவித்துள்ளார். இவர் கூறுகையில், "ஆடுகளம் வேகப் பந்துவீச்சுக்குச் சாதகமாக இருக்கும். எனினும் சுழற்பந்து வீச்சாளர்களும் திறமை வெளிப்படுத்தலாம்." - என்றார்.

★ பேர்த்தில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்டில் ஷேவாக், டிராவிட் ஆகியோர் தொடக்க வீரர்களாகக் களமிறங்க வேண்டும் என முன்னாள் ஆஸ்திரேலிய அணித்தலைவர் ஸ்ரீவ் வோ தெரிவித்துள்ளார். இவர் அளித்த பேட்டியில் கூறியிருப்பவையாவன:-

"டிராவிட்டை ஆரம்ப வீரராகக் களமிறக்குவதில் பிரச்சினை இல்லை, எனினும் ஷேவாக்கிற்கு வாய்ப்பு அளிப்பது அவசியம். ஷேவாக் தனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினால் ஓட்டங்களைக் குவியும். சில போட்டிகளில் ஓட்டங்கள் எடுக்கவில்லை என்பதற்காக டிராவிட்டை குறைத்து எடைபோட முடியாது." - என்றார்.

## சாதனை சமனாகுமா?

சிட்னி, ஜனவரி 02

இன்று ஆரம்பமாகும் சிட்னி டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா வெற்றி பெற்றால் அந்த அணி தனது சொந்த சாதனையைச் சமன் செய்யும். கடந்த 2005ஆம் ஆண்டு ஓகஸ்ட்டுக்குப் பிறகு ஆஸ்திரேலியா ஒரு டெஸ்ட்டில் கூடத் தோல்வியடையவில்லை.

இந்நிலையில் அந்த அணி தொடர்ந்து 14 டெஸ்ட் போட்டிகளில் வெற்றி பெற்ற நிலையில் மெல்போணில் இந்தியாவிற்கு எதிராக வெற்றி பெற்றது. இது அந்த அணியின் 15 ஆவதுதொடர் வெற்றியாக இருந்தது.

ஏற்கனவே ஸ்ரீவோ தலைமையிலான ஆஸ்திரேலியா அணி 1999ஆம் ஆண்டுமுதல் 2001ஆம் ஆண்டு வரை தொடர்ந்து 16 டெஸ்ட் போட்டிகளில் வென்று உலக சாதனை படைத்தது. சிட்னி டெஸ்ட்டில் பொண்டிங் தலைமையிலான அணி வெற்றி பெற்றால் அந்தச் சாதனையைச் சமன் செய்யலாம்.

அதேநேரத்தில் சிட்னி மைதானத்தில் கடந்த 10 ஆண்டுகளில் ஆஸ்திரேலியா அணி தோல்வியைத் தழுவியதில்லை. மேலும் இந்தியா சிட்னியில் ஒரேயொரு முறைதான் இதுவரை வெற்றி பெற்றுள்ளது. அதுவும் 30 ஆண்டுகளுக்கு முன்னர் பெற்ற வெற்றியாகும்.

## அணியின் நலனே முக்கியம்

### யுவராஜ்சிங் பேட்டி

சிட்னி, ஜன.02

அணியின் நலனுக்காகவே நான் எப்பொழுதும் விளையாடுவேன் என்று யுவராஜ் சிங் தெரிவித்துள்ளார்.

மெல்போணில் நடந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் யுவராஜ் சிங்கை அணியில் சேர்க்கவேண்டும் என்பதற்காக டிராவிட் தனது துடுப்பாட்ட வரிசையில் மாற்றம் செய்து தொடக்க ஆட்டக்காரராகக் களமிறங்கினார். மத்திய வரிசையில் இறங்கி விளையாடிய யுவராஜ் சிங் 0, 5 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார்.

அத்துடன் யுவராஜ் சிங் முதல் இன்னிங்ஸில் ஆட்டமிழந்ததும் உடனடியாக மைதானத்தை விட்டு வெளியேறாமல் நடுவரின் முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நின்று மெதுவாகச் சென்றார். இது பற்றி போட்டி நடுவர் விசாரணை நடத்தினார். தண்டனை எதுவும் வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் யுவராஜ் சிங்கின் போக்கு சரியில்லை என்றும் அவருடன் அணி நிர்வாகம் தனியாகப் பேச இருப்பதாக அணியின் உதவிப் பயிற்சியாளர் லால்சந்த் ராஜ்புட் கூறினார் எனச் செய்திகள் வெளியாகின.

இதனை ராஜ்புட் மறுத்துள்ளார். 'ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் வேண்டும் என்றே திரித்து செய்திகள் வெளியிட்டுள்ளன. ஆஸ்திரேலியப் பத்திரிகைகள் வீரர்களின் மனோதிடத்தை பாதிக்கும் யுக்தியை கையாள்கின்றன. யுவராஜ் சிறந்த வீரர். அவர் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். அவரது திறமையில் எந்தவித சந்தேகமும் இல்லை' - என்று ராஜ்புட் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இந்திய வீரர் யுவராஜ் சிங் தனது நிலை குறித்து அளித்துள்ள ஒரு பேட்டியில், 'நான் எப்பொழுதும் அணியின் நலனுக்காக விளையாடுபவன். எனது ஜூனியர் அணியாகட்டும், பஞ்சாப் அணியாகட்டும் அல்லது வடக்கு மண்டல அணியாகட்டும், இந்திய அணியாகட்டும், எந்த அணிக்கு தேர்வு செய்யப்பட்டாலும் அந்த அணியின் நலனுக்காக விளையாடி வருகிறேன். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் கடைசி நாள் வரை அணி நிர்வாகத்தின் தேவைக்கு ஏற்ப நான் தொடர்ந்து செயல்படுவேன். அணி நிர்வாகம் கேட்டுக் கொள்வதற்கு தக்கபடி எப்பொழுதும் எனது ஆட்டத்தை அளித்துள்ளேன். அதேபோல் எனது ஆட்டம் தொடரும்." - என்று கூறியுள்ளார்.

## இந்திய வீரர்களுக்கு மனவலிமைப் பயிற்சி

### அணி நிர்வாகம் முடிவு

சிட்னி, ஜன.02

ஆஸ்திரேலியாவில் கிரிக்கெட் தொடரில் பங்கேற்றுள்ள இந்திய வீரர்களுக்கு மனவலிமைப் பயிற்சி அளிக்க அணி நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

மெல்போணில் நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் 337 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்தியா படுதோல்வியைத் தழுவியது. அதற்கு வீரர்களின் உளவியல் தாக்கம் தான் காரணமேதவிர அவர்களிடம் உள்ள திறமையீனமல்ல என அணித்தலைவர் கும்ளேவும் உதவி ப் பயிற்சியாளர் லால்சந்த் ராஜ்புட்டும் கருத்து கூறியுள்ளனர்.

அதேசமயம் அடுத்த போட்டிகளில் எதிரணிக்கு அவர்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள் எனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

'மெல்போணில் நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் குறைவான ஓட்டங்களையே வீரர்கள் சேர்க்க முடிந்தது. அவர்களிடம் திறமைக்குக் குறைவில்லை. ஆனால், இம்மாதிரியான தருணத்தில் உளவியல் வல்லுநர்களிடம் அவர்கள் ஆலோசனை பெறுவது அவசியம். இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கு முன்னதாக அப் பயிற்சியைப் பெற அவர்களுக்கு அவகாசம் இருக்காது' என ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ராஜ்புட் தெரிவித்துள்ளார்.

'தொழில்நுட்பரீதியாக வீரர்களிடம் குறைவில்லை. முதலில் தங்களுக்கு வலிமை உள்ளது என்பதை உணர்ந்து செயல்படுத்த முடியும் என்ற நம்பிக்கையை அவர்கள் கொள்ள வேண்டும். தன்னம்பிக்கை மிகவும் அவசியம். அதுவே எந்தத் துறையிலும் உயிர்வாழ உதவியாக இருக்கும். இதற்கு முன்பும் பல்வேறு போட்டிகளில் உளவியல் ரீதியான பயிற்சிகளை வீரர்கள் மேற்கொண்டுள்ளனர். அது நல்லதும் கூட." என்றும் ராஜ்புட் கூறினார்.

## மக்கியூலம் அதிரடி; நியூஸிலாந்து வெற்றி

குவீன்ஸ்ரவுண், ஜன.02

பிரண்டன் மக்கியூலம் அதிரடியாக ஆடி 28 பந்துகளில் 80 ஓட்டங்களைக் குவிக்க பங்களாதேஷுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடந்த கடைசி மற்றும் 3ஆவது ஒருநாள் போட்டியில் நியூஸிலாந்து வெறும் 6 ஓவர்களில் வெற்றியைச் சுவீகரித்துச் சாதனை படைத்தது. இதன் மூலம் ஒருநாள் தொடரை 3-0 எனும் கணக்கில் நியூஸிலாந்து வழித்தெடுத்தது.

94 ஓட்டங்கள் என்ற இலக்கைக் கலைத்த நியூஸிலாந்து அணியை ஆரம்ப வீரர்களான ஜிம்மி கௌவ், பிரண்டன் மக்கியூலம் ஆகியோர் இல்குவாகக் கரை சேர்த்தனர்.

தனக்குக் கிடைத்த பந்துகளை எல்லாம் பவுண்டரிக்கும் சிக்ஸருக்கும் விளாசி ரசிகர்களைக் குஷிப்படுத்தினார் மக்கி[illegible]லம். 19 பந்துகளில் அரைச் ச[illegible]த்தைக் கடந்த அவர், தொடர்ந்தும் அதிரடி காட்டினார். மறுமுனையில் நின்ற ஜிம்மி கௌவ்வுக்கு துடுப்பெடுத்தாட பெரியளவில் வாய்ப்புக் கிடைக்காதபடி மக்கியூலத்தின் அதிரடி இருந்தது.

முதல் ஓவரில் 7 ஓட்டங்கள் கிடைத்தது. 2 தொடக்கம் 6 வரையான ஓவர்களில் 21, 13, 21, 16, 17 ஓட்டங்கள் என விளாசப்பட நியூஸிலாந்து இலகுவாக வெற்றிகரை சேர்ந்தது. மக்கியூலம் வெறும் 28 பந்துகளில் 80 ஓட்டங்களை விளாசினார். அவரது ஓட்ட எண்ணிக்கையில் 9 பவுண்டரிகளும் 6 சிக்ஸர்களும் அடங்குகின்றன. மறுமுனையில் நின்ற கௌவ் 8 பந்துகளில் 7 ஓட்டங்களைச் சேர்ந்திருந்தார்.

இறுதியில் 6 ஓவர்களில் வெறும் 31 நிமிடங்களில் 95 ஓட்டங்களை விளாசி 10 விக்கெட்டுகளால் நியூஸிலாந்து வெற்றியைப் பதிவு செய்தது.

ஒருநாள் போட்டிகளில் 90 இற்கு மேற்பட்ட ஓட்டங்களை குறைந்த ஓவர்களில் அடைந்தமை இதுவே முதல் த[illegible]வையாகும். அத்துடன் ஒருநாள் [illegible]போட்டிகளின் வரலாற்றில் [illegible] வரலாற்றில் 'மிக விரைவான வெற்றி' ஆக இது கருதப்படுகின்றது.

முன்னதாக, நாணயச் சுழற்சியில் தோல்வியடைந்த பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்டிருந்தது.

மில்ஸ், மாஸன் ஆகியோரின் வேகம் அச்சுறுத்த பங்களாதேஷ் ஆரம்பத்திலிருந்தே பெரும் தடுமாற்றத்தைச் சந்தித்தது. தொடர்ந்து பந்துவீசிய அணித்தலைவர் விக்ரோறியும் சுழலில் பிரகாசிக்க பங்களாதேஷ் அணி 37.5 ஓவர்களுக்கு முகம் கொடுத்து 93 ஓட்டங்களுள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. அதிகபட்சமாக அணித்தலைவர் அஸ்ரபுல் 25 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

நியூஸிலாந்தின் பந்துவீச்சில் மில்ஸ், மாஸன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் விக்ரோறி 7 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

நேற்று 5 விக்கெட்டுகளை வீழ்த்தியதைத் தொடர்ந்து ஒருநாள் போட்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய நியூஸிலாந்து வீரர்கள் பட்டியலில் முதல் இடத்திற்கு விக்ரோறி முன்னேறினார். இதுவரை காலமும் இந்தச் சாதனை கிறிஸ் ஹரிஸ் (203 விக்கெட்டுகள்) வசமிருந்தது.

இதேவேளை, நேற்று முடிவடைந்த 2007 ஆம் ஆண்டில் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றிய வீரர் என்ற சாதனையையும் விக்ரோறி (4விக்கெட்டுகள்) தன்வசமாக்கினார். போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருது இவருக்கே வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் நம்பிக்கையை உருவாக்குதல் மற்றும் ஸ்திரமான நடவடிக்கைக்கான திட்டத்தின் CBSM

## வெற்றிடங்கள்

இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு நம்பிக்கையை உருவாக்குதல் மற்றும் ஸ்திரமான நடவடிக்கைக்கான திட்டம் கொழும்பு அலுவலக UNHCR உதவியுடன் கீழ்க்கண்ட பதவிகளுக்கு ஆள்சேர்ப்பதற்கு விரும்புகிறது. இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைத்தரத்தை நிரந்தரப்படுத்தல், பாதுகாத்தல், அபிவிருத்தி செய்தல், வடகிழக்கில் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கு (IDPS) பாதுகாப்பாக கௌரவமாக திரும்புவதற்கும் ஒன்றுசேர்வதற்குமான சூழலை ஏற்படுத்துவதே நம்பிக்கையை உருவாக்குதல் மற்றும் ஸ்திரமான நடவடிக்கைக்கான திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

### 1) இணைப்பாளர் Coordinator 1 பதவி (யாழ்ப்பாண மாவட்டம்)

*கல்வித்தகைமை : க.பொ.த (உ/த) சித்தியடைந்திருத்தல் மற்றும் க.பொ.த (சா/த) சிங்களம்/ தமிழ், ஆங்கிலம் மற்றும் கணிதம் உட்பட ஐந்து திறமைச் சித்திகள்.*

திட்டங்களில் வேலை செய்யும்போது பதவிநிலை ஊழியர்களிற்கான திட்டங்களை வகுத்தல் ஒத்துழைத்தல், மேற்பார்வையிடுதல், நடைமுறைப்படுத்தல் வேண்டும். இணைப்பாளர் CBSM பிரிவு, UNHCR நம்பிக்கையை உருவாக்குதல் மற்றும் ஸ்திரமான நடவடிக்கைக்கான திட்டத்தில் (CBSM) பீல்ட் ஃபோக்கல் பொயின்ட், மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவு மற்றும் மாவட்ட பிரதான அரசாங்க நிறுவனம் என்பனவற்றுடன் இணைந்து சேவையாற்றவேண்டும். இதற்கு மேலதிகமாக மாவட்ட அலுவலகத்தில் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல் குறிப்பிட்ட வேலைகளில் செயற்பாட்டு அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் சிறந்த குழுத்தலைவராக இருத்தல் வேண்டும்.

மாவட்ட அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளருக்குப் பொறுப்பாகவும் அவர்களால் வழங்கப்படும் எல்லா வேலைகளையும் செய்பவராகவும் இருத்தல் வேண்டும்.

*அனுபவம் : ஐ.நா. மற்றும் அரச சார்பற்ற நிறுவனம் அல்லது அதற்கு ஒப்பான வேறு மனிதாபிமானத் திட்டங்களில் ஆகக் குறைந்தது 5 வருட வேலை அனுபவம் இருத்தல்.*

*சம்பளம் : மாதம் 25,000ரூபா மற்றும் உரிய அரசாங்க படிகளுடன்*

### 2) உதவி இணைப்பாளர் Assistant Coordinator 1 பதவி (யாழ்ப்பாண மாவட்டம்)

*கல்வித்தகைமை : க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியுடன் சிங்களம்/ தமிழ் ஆங்கிலம் மற்றும் கணித பாடங்கள் உட்பட ஐந்து திறமைச் சித்திகள்.*

இணைப்பாளரின் கீழ் கடமையாற்றுவதுடன் CBSM திட்ட வேலைகளை அமுல் நடத்த உதவியாக இருத்தல் வேண்டும். கணனி அறிவு உள்ளவராக இருத்தலுடன் இணைப்பாளருக்கு நிர்வாக வழங்கல் மற்றும் செயலக வேலைகளில் உதவியளித்தல்.

*அனுபவம் : மேற்கண்ட இணைப்பாளர் பதவி அனுபவத்துடன் ஆகக் குறைந்தது மூன்று வருட வேலை அனுபவம் இருத்தல்*

*சம்பளம் : மாதம் 20,000 ரூபா மற்றும் உரிய அரசாங்க படிகள்*

யாழ்ப்பாண மாவட்டத்தில் வசிக்கும் ஆவலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை 09.01.2008 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். நேர்முகப்பரீட்சை 10.01.2008 அன்று காலை 9 மணிமுதல் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் நடைபெறும். அச்சமயத்தில் விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் சான்றிதழ்களுடன் சமுகமளிக்க வேண்டும்.

க.கணேஸ்
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(சி/54855)

## 21 ஆவது வருட பிறந்த தின நாளும் 21 ஆவது மாத நினைவு நாளும்

### செல்வி மாணிக்கம் லாவண்யா

(யசோ)



மண்ணுலகிற்கு 02.01.1987 விண்ணுலகிற்கு 15.05.2006

அகவை இருபத்தொன்றை ஆவலுடன்- இப் புவியில்
பாங்குடன் கொண்டாடிடவே காத்திருந்தோம்
என்றென்றும் சிரிப்புடன் எழிலாய் வலம் வந்தீர்
கலகல வென்று களிப்புடன் பழகினீர்
எண்ணிலாக் கனவுகளை எண்ணியே வாழ்ந்திருந்தீர்
கனவுகள் நனவாகிப் போகுமுன்பே- உன்னை
காலனாக வந்த சிறியவன் பத்தொன்பதாவது
அகவைதனில் அவ்வுலகம் அனுப்பினானே
பெண்ணிலே சிறந்த கண்மணியாய் திகழ்ந்து
பேருவகை அளித்தீர் பெருமையுடன் வாழ்ந்தீர்
புண்ணியமே செய்து விட்டீர் புகழுடம்பு பெற்றீர்
புனிதர் கழலடியில் பெற்றிடுவீர் சாந்தி!

கண்ணீர்ப்பூக்களால்....
அப்பா, அம்மா,
அக்கா,
அண்ணா.

"லாவண்யம்",
614/3, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம். (69571)

## AROD

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

*18ஆவது ஆண்டு விழா*

மாற்று வலுவிழந்தோர்களிடமிருந்துபோட்டிகளுக்கான

### விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தின் 18ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு (10.02.2008) பல்வேறு மாற்று வலுவுடையோர்களிடையே கீழ்வரும் போட்டிகள் நடைபெறவுள்ளன. போட்டியில் பங்குபற்ற விரும்பும் மாற்று வலுவுடையோர்கள் கீழ்வரும் முகவரிக்கு தமது விண்ணப்பங்களை 15.01.2008 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

ஒருவர் இருசக்கர, முச்சக்கர வண்டி ஓட்டம் தவிர்ந்த ஆகக்கூடியது 3 போட்டியில் மட்டுமே பங்குபற்ற முடியும் என்பதுடன் ஒரு போட்டியில் இரண்டிற்கு குறைந்த போட்டியாளர்கள் இருக்குமிடத்து அப்போட்டி இரத்துச் செய்யப்படும். போட்டி பற்றிய விதிமுறைகளையும் விண்ணப்பப் படிவங்களையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**போட்டிகளின் விபரம்:**

1) ஆண், பெண் இருபாலாரிற்குமான இரு சக்கர, முச்சக்கர வண்டி ஓட்டம், 2) என்வலப் ஒட்டுதல், 3)தையல், 4) ஐசிங் தயாரித்தல், 5) மாலை கட்டுதல், 6)கோலம் போடுதல், 7)சித்திரம் வரைதல், 8)பாட்டு, 9)நடனம், 10) கவிதை வாசித்தல், 11) கட்டுரை எழுதுதல், 12) விளக்குமாறு தயாரித்தல், 13) திருக்குறள் மனம், 14) வினோத நடனம் 15)கதிரை பின்னுதல், 16)பேச்சு, 17) தலை அலங்காரம், 18)கைப்பணி வேலை.

தலைவர் AROD
100, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா சிவபாதசுந்தரமூர்த்தி



(ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

மாவிட்டபுரம், வீமன்காமம் வடக்கைப் பிறப்பிடமாகவும், தற்போது கற்புலம்வீதி உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சிவபாதசுந்தரமூர்த்தி (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) 28.12.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற சின்னையா - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும் கௌரிமனோகரி (ஆசிரியை, யா/வசாவிளான் ம.ம.வி.), வசந்தகௌரி (ஆசிரியர், யா/வசாவிளான் ம.ம.வி.), சிவானந்தகௌரி (ஹொலண்ட்), சிவனேசகௌரி (கனடா), சிவபாலகௌரி (லண்டன்), சிவஞானகௌரி (ஜேர்மனி), இராஜமார்த்தாண்டமூர்த்தி (கண்ணன் - லண்டன்), வீரமார்த்தாண்டமூர்த்தி (பாரதி - கனடா), காலஞ்சென்ற ஞானபாஸ்கரமூர்த்தி (ஆதித்தன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஸ்ரீதரன், விக்னேஸ்வரன் (ஆசிரியர் யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம்), செல்வகுமார் (ஹொலண்ட்), குகனேசன் (கனடா), ரதிகரன் (லண்டன்), சந்திரதாஸ் (ஜேர்மனி), ஜெயசுதா (பிரான்ஸ்), வித்தியமாலா (கனடா) ஆகியோரின் மாமனும் திருஞானசம்பந்தமூர்த்தி (லண்டன்) காலஞ்சென்ற இராசலட்சுமி, கனகாம்பிகை (கனடா), நகுலாம்பிகை (கொழும்பு), குருமூர்த்தி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரண்ஜன், தனஞ்சயன், காருண்ஜன், ரிஷிகேசன், மதுராங்கன், செல்வா, அருந்தா (ஹொலண்ட்), சுவர்ணலதா (கனடா), ரவீஷ், ரவித்தா (லண்டன்), சஞ்சிகா, சஞ்சுதன், சுபாஷிகா (ஜேர்மனி), அபினயா, அகல்யா (பிரான்ஸ்), விதுஷ் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2008) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் இளம்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கற்புலம் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.
தொ.பே : 222 5588 (68510)

தகவல்:
பிள்ளைகள்: கௌரி மனோகரி ஸ்ரீதரன்,
வசந்தகௌரி விக்னேஸ்வரன்

### ஞானப்பிரகாசம் ஆபிரகாம்

*(தம்பித்துரை)*



உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஞானப்பிரகாசம் ஆபிரகாம் (ஓய்வுபெற்ற ஊழியர், திருமலை துறைமுகம்) 31.12.2007 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மேரிமாக்கிறேற் ஆபிரகாமின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற திரு.திருமதி P.ஞானப்பிரகாசம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி சவுரிமுத்து தம்பதியரின் மூத்தமருமகனும் காலஞ் சென்ற தேவசகாயம், காலஞ்சென்ற செல்லம்மா, அழகம்மா (கனடா), அருளம்மா, பேணாட், ஜெயராசா, றீற்றம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் மரியதாஸ், மேரி வியாற்றிஸ், கிறிஸ்தோப்பர் (கனடா), ஜஸ்ரின் வில்பிரட் (டென்மார்க்), மேரி ஜெயசீலி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அசுந்தா, செலஸ்ரீன், மேரி பவானி (கனடா), அல்போன்சம்மா (டென்மார்க்), மத்தியூஸ் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.01.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆனைக்கோட்டை அடைக்கல நாயகி பேராலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின் பூதவுடல் காக்கைதீவு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உயரப்புலம், ஆனைக்கோட்டை.

தகவல்:
ஆ.மரியதாஸ் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி, கலை, கலாசார விளையாட்டுத் துறைகளில் மாணவர் சமூகத்தை வளர்த்தெடுப்பதற்காக உழைக்கும் நவாலி சென்.பீற்றர்ஸ் வித்தியாலயம்

கல்விசார் செயற்பாடுகளிலும், கலை, கலாச்சாரம், விளையாட்டு போன்ற இணைப் பாட விதான செயற்பாடுகளிலும் எமது பாட சாலை வளர்ச்சி-அபிவிருத்தியை கண்டு வருகின்றது.

இவ் வளர்ச்சியானது அதிபர்-ஆசிரியர் களுடைய பங்கு மட்டுமல்லாது -



பாடசாலையின் முகப்புத் தோற்றம்

இப்பாடசாலையில் அதீத அக்கறை கொண்ட நவாலியூர் பழையமாணவர்கள், சமயநிறுவனங்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள்; பங்குத்தந்தைகள், பாடசாலை அபிவிருத்தி சங்கம் மற்றும் நவாலி மக்களும் பூரணமான பங்களிப்பை வழங்குவதினால்தான் ஆண்டு 5 வரை இயங்கும் நவாலி சென்ற் பீற்றர்ஸ் றோ.க. த.க.பாடசாலை சண்டிலிப்பாய் கல்வி கோட்டத்திற்குள் தனித்துவமான பாடசாலையாக கணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கூறுகிறார் அந்தப் பாட சாலையின் அதிபர் யோசப் எட்வேட் பங்கிராஸ் அவர் மேலும் கூறியதாவது:-



மாணவி சி.கியானி

அத்துடன் கல்வி-கலை- கலாச்சாரம் மற்றும் விளையாட்டு போட்டிகளிலும் எமது மாணவர் கோட்ட மற்றும் வலயப் போட்டிகளில் பல வெற்றிகளையும், சாதனைகளையும் படைத்து வருகின்றனர்.

இப்பாடசாலை ஆண்டு 1 முதல் 5 வரை (170) மாணவர்களை யும் ஆறு ஆசிரிய ஆளணியையும் கொண்டு இயங்கி வருகின்றது.

24.10.2005 முதல் நவாலி சென்ற். பீற்றர்ஸ் றோ.க.த.க. பாடசாலை அதிபராக பொறுப்பேற்ற காலம் முதல் இன்றுவரை மாணவர்களின் கல்வியை மையமாகக் கொண்டு கற்றல்-கற்பித்தல் நடவடிக்கையில் முன்கொண்டு செல்கின்றேன்.

மேற்படி அதிபரின் கருத்தைத் தொகுத்து, பாடசாலை மாணவர்களின் கல்வி தொடர்பாக, அதாவது புலமைப் பரிசில் சித்திபற்றி யாது கூறுகிறீர்கள் என கேட்டபோது,

புலமைப் பரிசில் பற்றி இன்று ஊடகங்கள் முதன்மைப்படுத்துகின்றன. அதி லும் 'உதயன்' பத்திரிகை எமது பாட சாலை மாணவர்களின் தரம், நிலை தொடர்பாக வெளிக் கொண்டு வருகின்ற விடயம் எம் போன்ற அதிபர்களை மேலும் கல்விப் புலத்தில் ஆழ்ந்த நிலைக்கு கொண்டு செல்கின்றது.

எமது பாடசாலை 2007 புலமைப் பரிசில் பரீட்சையில் செல்வி சிவஞானம் கியானி 177 புள்ளிகளைப் பெற்றார்.

அதிலும் சண்டி லிப்பாய் கோட்டத் தில் முதலாம் இடத்தைப் பெற்றது செல்வி சிவ ஞானம் கியானி மட்டுமல்லாது எமது பாட சாலைக்கு பெருமையைத் தேடித் தந்தது டன் நவாலி சமூகம் எமது பாடசாலையை வாழ்த்தவும் உதவினார்.

எமது பாடசாலையூடாக 2007 இல் புல மைப் பரிசில் பரீட்சைக்கு 28 மாணவர்கள் தோற்றியிருந்தார்கள்.

இதில் 8 மாணவர்கள் சித்தி பெற்றனர்.

அதில் 4 பேர் ஆண்கள், 4 பேர் பெண்கள்.

நவாலி சென்ற். பீற்றர்ஸ் பாடசாலை 1881 இல் ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் 2007 இல் தான் அதிகூடிய மாணவர்களான 8 பேர் (செ.டிலக்ஷன்-148, சு.டினோசன்- 151, இ.யசிந்தன்-163, சே. அஸ்டோனிஷ்- 153, ற. கஜானா -161, து. கபிலா-150, சி.சிந் துஜா-141, சி. கியானி -177) சித்தியடைந்து சாதனை படைத் துள்ளனர்.

புள்ளி விபர ரீதியாக புலமைப் பரிசில் சித்தி பெற்றோர் விவரம் கடந்த 7 ஆண்டுகளில்:-

2000 - 2, 2001 - 4, 2002 - 4,2003 - 7, 2004 - 4, 2005 - 7, 2006 - 7, 2007 - 8.

09-07-1995 இல் நவாலி சென்ற் பீற்றர்ஸ் தேவாலயம் மீது விமானகுண்டு வீசும் போது இப்பாடசாலையும் தாக்கப்பட் டது. அத்தாக்குதலில் பெருமளவான உயிர்ச் சேதங்கள் ஏற்பட்டன. ஆலயமும் எமது பாடாலையும் தாக்கப்பட்டன. ஆனால் அதன் காயங்கள், வடுக்கள் இப்போதும் பார்க்கக் கூடியதாக உள்ளபோதும் மீள் புனரமைப்பு பணிகள் முன்னாள் அதிபர் சி.சுகந்திரன் காலத்தில் நிறைவெய்தியுள்ளன.

காலத்தின் தேவைகருதி, பாடசாலை

## கணனிக் கல்வி தற்போது அவசியம் ஆயினும் அதற்கான வசதிகள் இல்லை

யின் மாணவர் நலன் கருதி சர்வதேச தொண்டு நிறுவனங்களும் , உள்ளூர் நிறுவனங்களும் எமக்கு இரு தூண்களாக உதவி புரிந்தன.

முழுமையான கூரை வேலைகளை




நிறைவேற்றித் தந்தது.

செஞ்சிலுவைச் சர்வதேச குழுவினர் சமையல் பாத்திரங்கள், கிடாரங்கள் மற் றும் உதவிகளைப் புரிந்தனர்.

உலக உணவுத்திட்டம் மாணவர்களுக்கான மதிய உணவுகளை வழங்கி வருகின்றது.

யுனிசெவ் கற்றல் உபகரணங்களையும் தளபாடங்களையும் வழங்கி ஊக்குவித்து வருகிறது. மலசலகூட தொகுதிகளை அமைத்து தந்துள்ளது.

அத்துடன் நவாலி லயன்ஸ் கழகம், நவாலி சென்.பீற்றர்ஸ் ச.ச.நிலையம், முருகானந்த ச.ச.நிலையம் ஊன்று கோல் நிறுவனம் என்பனவும் மாணவர்களுக்கும் - பாடசாலைக்கும் பல்வேறு உதவிகளைச் செய் துள்ளன.

நவாலி ஹேமலதா செல்வராஜா குழந்தைகள் ஞாபகர்த்த நிறுவனமும் நவாலி வை.எம்.சி.ஏ. நிறுவனமும் மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்பு தொடர்பான பரிசில்களையும் வழங்கி ஊக்குவித்துள்ளன.

எமது பாடசாலை மாணவர்களின் விளையாட்டுக்கு மைதானம் இல்லாதது பெரும் குறையாகும். இத் தேவையை பூர்த்தி செய்ய சர்வதேச தொண்டு நிறுவனங்கள் ஏதாவது ஒரு வகையில் உதவ வேண்டும் என்பது எனது அவாவாகும்.

பாடசாலை முன்னேற்றம் துரிதமாக வளர்ச்சி அடைகிறது. இதற்கு முதற்காரணம் பாடசாலை ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பு.

அதனை விட வலய கல்வி பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், பிரதிகல்விப்பணிப்பாளர் சி.சுந்தரசிவம், கோட்டக்கல்விப் பணிப்பாளர் சி.கந்தசாமி ஆகியோரும் எமது பாடசாலைக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகிறார்கள்.



அதிபர்

அத்துடன் எமது பாடசாலைக்கு முழு முதல் உதவிகளை சென். பீற்றர்ஸ் ஆலய பங்குத் தந்தையர்களும், ஆலய நிர்வாகிகளும் செய்து வருவதுடன் மாணவர்களுக்கான குடிதண்ணீர் வசதிகளையும் முழுமையாக வழங்கி வருகின்றனர்.

பாடசாலைக்கு குழாய்க் கிணறு அவசியமானதாக உள்ளது. மேலும் நூறு வருட பழமைவாய்ந்த பிரதான வீதிச் சுற்று மதிலை மீள் புனரமைப்பு செய்ய சர்வதேச தொண்டு நிறுவனங்கள் எமக்கு உதவி செய்ய வேணடும்.

பாடசாலையில் சகல வளங்களையும் முழுமையாகப் பயன்படுத்தி ஏனைய பாடசாலைகளின் தரத்துடன் கொண்டு செல்கிறோம்.

-ரமேஷ்-

எனினும் 100 வீதம் முழுமையடைய செய்ய வேண்டுமெனில் - மாணவர்விடயத்தில் பாடரீதியாக பெற்றோரும் அக்கறையோடு செயற்பட்டால் முழுமைக் கல்வியை சிறுபராயத்திலே மாணவர்கள் அடைந்து விடுவார்கள். இன்றைய நவீன அறிவியல் உலகின் வளர்ச்சிப் போக்கிற்கு ஏற்ப எமது பாடசாலை மாணவர்கள் ஈடு கொடுக்க முடியாதுள்ளனர்.

கணனி பயன்பாடு என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

எமது பகுதி சர்வதேச பாடசாலைகளில் வயது 5 இல் உள்ள மாணவர்கள் கணனி பிரயோகம் பற்றி கற்கிறார்கள். ஆனால் எமது மாணவர்களும் அதன் சிறு பயன்பாட்டை அறியக் கூடிய வகையில் கணனி கற்கைகளையும் புகுத்த வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது என்றார் அதிபர் யோசப் அட்வேட் பங்கிராஸ்

2000 ஆண்டில் இருந்து 2007 வரை மாணவர்களின் கல்விப்புலம் - புலமை பரிசில் பரிசில் சித்தி பெற்று வீறுநடை போட்டு வருகின்றனர் மாணவர்கள்.

இவ்அதிகரித்த முன்னேற்றத்திற்கு முதுகெலும்பாக இருந்து தோள்கொடுப்பவர்கள் தமது ஆசிரிய குழாம்.

எனினும் பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் இல்லை. இந்த குறைகளை நிவர்த்தி செய்வதற்காக கல்வி திணைக்கள அதிகாரிகளும், பெற்றோருர்களும் நலன் விரும்பிகளும் உதவிபுரிய வேண்டும். ✱

# புவி நடுக்கம் என்றால் என்ன?

*இயற்கை அனர்த்தங்களில் ஒன்று புவி நடுக்கமாகும். புவியோட்டைத் தகடுகள் ஒன்றோடொன்று நெருங்கி மோதுகையில் ஏற்படும் அமுக்கம் திடீரென விடுபடும் பொழுது புவிநடுக்கம் புவியோட்டுத் தகடுகளின் ஓரங்களின் வழியாக ஏற்படுகின்றது. இயற்கைக் காரணங்களால் புவியோட்டின் ஒருபகுதி சடுதியாக அதிர்ந்தால் அதனைப் புவி நடுக்கம் என்பர். புவியோட்டின் கீழ்ப்பகுதிகளில் ஏற்படும் அகவிசைத் தாக்கங்களினால் தோன்றும் அலைகள் புவியோட்டின் ஒருபகுதியை நடுக்கத்திற்குள்ளாக்குகின்றன.*

*புவிநடுக்கங்கள் இயற்கைக் காரணங்களாலும், மானிடக்காரணிகளாலும் உருவாகின்றன. புவிநடுக்கங்கள் தோன்றுவதற்குரிய பிரதான காரணி புவிக்கவசத்தகடுகளின் நகர்வேயாகும். புவியோட்டின் கீழ்ப்பகுதிகளில் ஏற்படும் அகவிசைகள் தோற்றுவிக்கும் தாக்கத்தால் கவசத்தகடுகள் ஒன்றிலிருந்து ஒன்று விலகியும், ஒடுங்கியும் அமிழ்ந்தும் செயற்படுகின்றன. தட்டோடுகளின் இந்த அசைவு புவிநடுக்கத்தைத் தோற்றுவிக்கின்றது. 1993 ஆம் ஆண்டு இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் நிகழ்ந்த புவிநடுக்கத்திற்கு இந்திய கவசத்தகடு, ஐரோ- ஆசிய கவசத்தகட்டினை நோக்கி நகர்ந்தமையையே காரணம் என அறியப்பட்டுள்ளது.*

*புவிநடுக்கம் தோன்றுவதற்கு எரிமலைகளின் செயற்பாடுகளும் காரணமாக உள்ளன. எரிமலைகள் கக்குகை நிகழ்த்தும் போது புவி நடுக்கம் அயற்பகுதிகளில் தோன்றுகின்றது. சிறியளவிலான புவிநடுக்கத்தைத் தோற்றுவிக்கும் இடவிளக்கவியற் காரணிகளில் மண்சரிவுகள், பனிக்கட்டித் திணிவுகளின் பாரிய சரிவுகள் பாறைச் சரிவுகள் என்பன புவிநடுக்கத்தைத் தோற்றுவிக்கின்றன. பெருக்கு அலைகளின் தாக்குதல், பெரும் நீர்த்தேக்கங்கள் உடைவதால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு என்பனவும் சிறியளவிலான புவி நடுக்கங்கள் ஏற்படக் காரணமாகின்றன.*

*மனித செயற்பாட்டினால் உருவாக்கப்படும் நீர்த்தேக்கங்கள், ஆழமான கிணறுகள், அணுப் பரிசோதனைகள் புவிநடுக்கத்திற்கு வழி செய்கின்றன. 2003 ஆம் ஆண்டு இலங்கையின் மலைநாட்டில் உணரப்பட்ட புவி நடுக்கத்திற்கு மகாவலிகங்கையில் அமைக்கப்பட்ட பாரிய ஒன்பது நீர்த்தேக்கங்களே காரணம் எனக் கருதப்பட்டது. நிலத்திற்கடியில் அணுகுண்டுகளை வெடிக்கவைக்கும் செயலும் புவி நடுக்கத்திற்குக் காரணமாகின்றது.*

*புவி நடுக்கம் நிகழுமிடம் குவியம் எனவும், அதற்கு நிலைக்குத்தாக மேற்பரப்பில் உள்ள இடம் மேன்மையம் எனவும் குறிப்பிடப்படும். புவிநடுக்கங்கள் அலை வடிவிற் பரவுகின்றன. புவிநடுக்க அலைகளை P அலை, S அலை, L அலை என மூன்றாக வகுப்பர். P அலைகளே முதலில் வெளிப்படும். S அலைகளே புவிநடுக்க அழிவுகளைத் தோற்றுவிப்பன. L அலைகள் வேகம் குறைந்தவை.*

*புவி நடுக்க அளவுகளை அளவிடுவதற்குப் புவி நடுக்கமானி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. புவிநடுக்கங்களின் சக்தியை அளவிடுவதற்கு ரிச்டர் அளவு முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.*

*புவிநடுக்கம் ஒடுங்கிய புவியியல் வலயங்களில் ஏற்படுகின்றது. இந்த ஒடுங்கிய புவியியல் வலயங்கள் கவசத்தகட்டோடுகளின் விளிம்புகளாக இருப்பதைக் காணலாம். பசுபிக் சமுத்திரத்தில் புவி நடுக்கம் ஏற்படும் பகுதி ஒரு வட்ட வலயமாக இருக்கின்றது. இதனைப் பசுபிக் மோதிர வலயம் என்பர். பூமியில் உருவாகின்ற புவிநடுக்கங்களில் அதிகமானவற்றின் உற்பத்திப் பிரதேசமாக இந்தப் பசுபிக் வட்டவலயம் விளங்குகின்றது. மத்தியதரைக்கடல், இமயமலைவலயம் முக்கியமான இன்னொரு புவிநடுக்க வலயமாகும். ஐஸ்லாந்து முதல் தென் அத்திலாந்திக் மத்திய சமுத்திர வலயம், ஆபிரிக்காவின் சிறப்புவலயம் என்பனவும் ஏனைய புவிநடுக்க வலயங்களாகும்.*

*புவிநடுக்கத்தின் விளைவால் ஆழிப்பேரலைகள் உருவாகி பேரழிவுகளை ஏற்படுத்துகின்றது. இதற்குத் தக்க உதாரணம் 2004 ஆம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி எனப்படும் ஆழிப் பேரலையாகும்.*

*பேரழிவுகளை ஏற்படுத்துகின்ற புவிநடுக்கத்திலிருந்து மக்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புவிநடுக்க அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்யும் போது புவிநடுக்கத்தால் ஏற்படும் அழிவுகளை மதிப்பீடு செய்து கொள்ளலாம்.*

*புவி நடுக்கம் பற்றிய விவரங்களைப் பொது மக்களுக்கு அறியச் செய்தல் வேண்டும். அது பற்றிய கல்வியினைப் பெற்றுக்கொடுத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் வெற்றிகரமாக புவிநடுக்கத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு முகம் கொடுக்க முடியும்.*

திருமதி [illegible]
ஆசிரியர், பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தர பாடசாலை.



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் இடம்பெற்ற ஆசிரியதின விழாவின் போது பழைய மாணவர் சங்கத் தலைவர் எஸ்.பால சுப்பிரமணியம் தலைமையில் அதிபர், ஆசிரியர்கள், விருந்தினர்கள் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். (218)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IIS
## COMPUTER COURSES

Batch 1: 04/01/2008
Batch 2: 05/01/2008
Batch 3: 23/01/2008
Batch 4: 26/01/2008

COURSES:-

1.Diploma in Microsoft Office
2.Diploma in Desktop Publishing
3.Diploma in Internet Technology
4.Diploma in Hardware Technology
5.Diploma in Computer Programming
6.Diploma in Eng.Drawing & AutoCAD
7.Diploma in Computerized Accounting
8.Certificate in Java Programming
9.Certificate in Visual C Programming
10.Certificate in Visual Basic Programming

"உங்கள் ஒளிமயமான எதிர்காலத்தின் வழிகாட்டி IIS"





INSTITUTE OF INFORMATICS STUDIES
100,CLOCK TOWER ROAD, JAFFNA.
T.P.No:021 222 2831


## தவறிவிட்டது

யாழினி இல்லம், மூத்தவிநாயகர் கோயிலடி, கரணவாய், கரவெட்டி என்ற விலாசத்தில் இருக்கும் கிருஷ்ணமூர்த்தி கிருஷ்ணலீலாவதி என்பவரின் (616173260V) என்ற இலக்கமுடைய தே.அ. அட்டை யாழ்ப்பாணத்திற்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைக்கவும். அல்லது 226 4535 என்ற T.P. இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் PIRIMA சிவப்பு வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 03.01.2008 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

* றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
* P. ரவி - தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
* மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
* திருமகள் களஞ்சியம் - சிவலிங்கப் புளியடி
* சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு

## பதவி வெற்றிடம்

எமது நெல்லியடிக்கிளை நிறுவனத்திற்கு கணனி பயிற்றுவிப்பாளர் பதவிக்கான வெற்றிடமுள்ளது. மேற்படி பதவிக்கான நேர்முகப்பரீட்சை 06.01.2008 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தகைமைகள்
* வடமராட்சியை வதிவிடமாகக் கொண்டிருத்தல்.
* முன் அனுபவம் விரும்பத்தக்கது.

குறிப்பு: நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிப்போர் தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

இயக்குநர்
Insititute of Business Management Studies (IBMS)
N.M.M.V. Road, Neliyady, Karaveddy. (69149)

## சவுக்கு மரங்கள் அழிப்பு

உடுப்பிட்டி, ஜன.2

வல்லைவெளி, இராசவீதி போன்ற பிரதான இடங்களில் உள்ள சவுக்கு மரங்கள்இனந்தெரியாதோரால் அழிக்கப்பட்டு வருகின்றன.

தொடர்ந்து, இடம்பெற்றுவந்த இந்த அழிப்பு நடவடிக்கை கடந்த வாரம் இடம்பெற்ற நத்தார் பண்டிகையையொட்டி அதிகரித்தது.

இதனால் அரைவாசிக்கும் அதிகமான மரங்கள் மொட்டையாக்கப்பட்டதுடன் மிகுதி மரங்கள்அடியோடு தறிக்கப்பட்டுள்ளதையும் காண முடிகிறது.

(202-155)


# COMPUTER EXPRESS
## INSTITUTE OF INFORMATION TECHNOLOGY

#15, Sirambiyadi Lane, Jaffna *Branch* : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 50% off

O/L பரீட்சை எழுதிய மாணவர்களிற்கான விசேடபிரிவுகள் ஆரம்பமாகின்றன.

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Honours Diploma in Computer Science<br>5 Months<br>~~10,500~~/= 2,100/= | Diploma in Web page Designing<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= |
| Diploma in Graphic Desining<br>4 Months<br>~~8,250~~/= 1,650/= | Diploma in Desktop Publishing<br>4 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Hardware Engineering<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= |
| Diploma in Auto CAD<br>3 Months<br>~~7,250~~/= 1,450/= | Diploma in Microsoft Office<br>3 Months<br>1,000/= | Accounting Package<br>3 Months<br>~~8,250~~/= 1,650/= |

50% Off ADVANCE COURSES

| | | |
|---|---|---|
| Diploma in Multimedia | ~~5500~~ | 2750 |
| Diploma in Video Editing | ~~6500~~ | 3250 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I : 04/01/2008 9AM
Batch II : 05/01/2008 10AM
Batch III : 06/01/2008 10AM
Batch IV: 09/01/2008 11AM


## ஓராண்டு நிறைவில் ஒளிரும் நினைவுகள்

மலர்வு
05
.
05
.
1945



உதிர்வு
02
.
01
.
2007

### திருமதி மரியதாஸ் மரியராணி

நேற்று நடந்தது போல் இருக்குதம்மா- நீங்கள்
காற்றோடு கலந்த செய்தி
தேற்றுவோர் தேற்றினாலும் தேறோம் தாயே
கூற்றுவன் உன் உயிர் பறித்த கொடுமையாலே
ஆற்றொணாத் துயரத்தில் அமிழ்ந்தோம்- நாமே
மாற்றவே முடியாதெம் மனத்துயரை
உற்றவர் சுற்றத்தவர் சூழ இருந்தும்

பெற்றவள் நீ எம் அருகிலில்லையே அம்மா!
நீயில்லா விடெமக்கு நிலவில்லா வானமம்மா
தாயில்லா சேய்கள் நாம் தவிக்கின்றோம்
உமைபெண்ணி

வாயாரக் கதறிநின்று வருந்தி அழுதாலும்
ஓயாதெம் மனக்குமுறல் தீராதெம் மனத்துயர்
காயாகிக் கனியாகிக் கனிந்தொரு மழலையாய்
தாயே நீ வ[illegible]

இல.08, இரண்டாம் குறுக்குத்தெரு,
பாஷையூர். (69599)

குடும்பத்தினர்.

### மந்திகை சத்தியசாயி சேவா நிலையத்தில் கிறிஸ்மஸ் விழா

புலோலி மந்திகை சத்திய சாயி சேவா நிலையத்தினர் நடத்திய கிறிஸ்மஸ்விழா அண்மையில் நிலையத் தலைவி வைத்திய கலாநிதி திருமதி புனிதம் தங்கராஜா தலைமையில் நடைபெற்றது. இலங்கை மெதடிஸ்த திருச் சபையின் கட்டைவேலி நெல்லியடி சேகர முதன்மைக் குரு அருள்திரு டி. அழகராஜா அடிகளார் விழாவிலே கலந்துகொண்டு ஆசி வழங்கினார்.


பால விகாஸ் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

சிறுவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் [illegible] அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

(202-218)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26
*
11
*
1910



மறைவு
02
*
01
*
2005

### அமரர் கந்தப்பு முருகேசு

*(ஓய்வுபெற்ற அதிபர்)*

அன்பின் உறைவிடமே
அறிவின் பிறப்பிடமே
எண்ணும் பொழுதெல்லாம்
இனிக்கும் இருப்பிடமே
இனியும் எப்பொழுதும்,
இருப்பாய் எம்முடனே.

குடும்பத்தினர்.

*'ஆனந்தகானம்',*
*ஆவரங்கால்,*
*புத்தூர்.*
(69572)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
18
*
05
*
1947



இறப்பு
13
*
01
*
2007

### அமரர் அப்பாத்துரை சண்முகநாதன்

*திதி: தசமி 02.01.2008*

பாசமுடன் நல்ல பழக்கவழக்கங்களையும் ஊட்டி
பண்புடன் எமை காத்து பேணி வளர்த்த
அன்புத் தந்தையே! உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தின்றோம்.


*உங்கள் பிரிவால் துயருறும்:*

மதவடி லேன்,
சுதுமலை. (69501)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
19
*
10
*
1935



உதிர்வு
13
*
01
*
2007

### அமரர் செல்லையா பத்மநாதன்

(கோண்டாவில்)

(முன்னாள் உறுப்பினர் கொக்குவில் V.C.)

பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்து
பண்போடு எம்மை வாழவைத்த அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று ஆனதோ
ஆறுமோ எம் துயரம்!

வங்கியடி, இணுவில் கிழக்கு,
இணுவில். (69436)

குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி முருகேசம்பிள்ளை இரத்தினம்மா

26.12.2005 இல் அமரத்துவம் அடைந்த எமது குடும்ப விளக்கின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நாளை (03.01.2008) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொண்டு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

'சத்தியபவன்'
சந்நிதி வீதி, உடுப்பிட்டி. (69541)

*தகவல்:*
இ.சத்தியவதி *(மகள்)*.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு கதிரைகள்

யாழ்ப்பாணம்,ஜன.2

தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு ஒரு தொகுதி கதிரைகள் யாழ். செயலகத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவை கிராம அலுவலர்களின் பாவனைக்கு வழங்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

பிரதேச செயலக கடமையின் போது கிராம அலுவலர்கள் வாங்குகளிலிருந்து பணியாற்றுவது பற்றி தெரிவிக்கப்பட்டதை அடுத்துக் கதிரைகள் அனுப்பப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-207)

## வீதி சேதம்

சுழிபுரம், ஜன.2

சுழிபுரம் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் முன்பாகவுள்ள சுழிபுரம் கிழக்குப் பகுதிக்கு செல்லும் வீதி மிகவும் சேதமடைந்த நிலையிலுள்ளது.

பல வருடங்களாக திருத்தம் செய்யாத இந்த வீதியைத் திருத்தி உதவுமாறு உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டபோதும் எவ்வித பயனும் கிடைக்கவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (203-28)

## ப.மா.ச. நிர்வாகிகள்

பருத்தித்துறை, ஜன.2

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்திற்கெனப் புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

சங்கத்தின் போசகரான கல்லூரியின் அதிபர் என்.தெய்வேந்திரராஜாவும், தலைவராக இலங்கை வங்கியின் இளைப்பாறிய உதவி முகாமையாளர் எஸ். பாலசுப்பிரமணியமும் பொருளாளராக ஆசிரியச் கே. தவநேசனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

13பேரைக் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

(202-226)

# நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவின் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி ஒதுக்கீடு

நல்லூர், ஜன.2

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளனர்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து இந்த நிதியை ஒதுக்கியுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான பத்மினி சிதம்பரநாதன் நல்லூர் ஸ்தான தமிழ் கலவன் பாடசாலைக்கு கணனிக் கொள்வனவுக்கென 75 ஆயிரம் ரூபாவும் சுரேஸ் பிரேமச்சந்திரன் திருநெல்வேலி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்குக் கணனிக் கொள்வனவுக்கென 75 ஆயிரம் ரூபாவும் -

கே. சிவநேசன் பலாலி ஆசிரியர் கலாசாலைக்குக் கணனிக் கொள்வனவுக்கென ஒரு லட்சம் ரூபாவும் ஒதுக்கியுள்ளனர்.

(202-111)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.2

வட்டுக்கோட்டை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் கொக்குவில், சுன்னாகம், உரும்பிராய், இணுவில், ஊர்காவற்றுறை ஆகிய கழகங்கள் இணைந்து நடத்தும் இலவச மருத்துவ முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் தொல்புரம் கிழக்கு விக்னேஸ்வரா சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.2

சங்கீத ஆசிரியரான சங்கீத வித்துவான் அப்புக்குட்டி திலகேஸ்வரனுக்கு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி சதானந்தா வித்தியாலயத்தில் அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

(202)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 7, 11 ஆகிய வகுப்புகளில் தமிழ்ப் பாடம் கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான தரவட்டச் செயலமர்வு நாளை வியாழக்கிழமை வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார்.

(203-207)

* * *

யாழ்ப்பாணம்,ஜன.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மாணவர்களுக்கான தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 5ஆம், 6ஆம் திகதிகளில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார் (203-207)

## எழுத்துப் பரீட்சை

நெல்லியடி, ஜன.,2

வடமராட்சி வலய ஆங்கில மொழி வளத்திற்கான வள நிலையம் நடத்தும் 2007 ஆம் ஆண்டுக்கான எழுத்து பரீட்சை எதிர்வரும் 31 ஆம் திகதி வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்தகவலை வலயத்தின் ஆங்கில பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி தெரிவித்தார். (202-115)

## செயன்முறைப் பரீட்சைகளே முதலில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜன.2

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சைக்கான செயல்முறைப் பரீட்சைகள் இந்த ஆண்டு தொடக்கம் எழுத்துப் பரீட்சைக்கு முன்னர் நடத்தப்படவுள்ளன.

பரீட்சைத் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்று பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இதுவரை காலமும் எழுத்துப் பரீட்சை முடிவடைந்த பின்னரே செயல்முறைப் பரீட்சைகள் நடைபெற்றன.

இந்த ஆண்டு தொடக்கம் புதிய நடைமுறை மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடனம், சங்கீதம் மற்றும் மனைப் பொருளியலுக்கான செயல்முறைப் பரீட்சைகளே இவ்வாறு நடத்தப்படவுள்ளன. (203-86)




## கல்வி டிப்ளோமா அனுமதிப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ். பல்கலைக்கழக ஈராண்டு பகுதி நேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறி, முழுநேர பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கைநெறி ஆகியவற்றுக்கான அனுமதிப்பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

விண்ணப்பித்தவர்களில் தகுதியானவர்களுக்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பப் பட்டுள்ளன என்றும் தெரிவானவர்களின் விவரப்பட்டியலை உதவிப்பதிவாளர் அனுமதிகள் கிளையில் பார்வையிடலாம் என்றும் பதிவாளர் அறிவித்துள்ளார். (அ-1)

## கைதடியில் கசிப்பு விற்பனை அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

சட்டவிரோத கசிப்பு விற்பனை கைதடி தென் கிழக்கு மற்றும் உவரிப் பகுதியில் அதிகரித்துள்ளதாகவும் இதனால் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள விசனம் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் காலை மற்றும் மாலை வேளைகளில் ஒன்றுகூடும் கசிப்பு விற்பனையாளர் பகிரங்கமாக விற்பனை செய்து வருகின்றனர்.

கோப்பாய் மற்றும் நீர்வேலிப் பகுதியிலிருந்து நீர்வேலித் தரவையூடாக விற்பனைக்கான கசிப்பு கொண்டுவரப்படுவதாகவும் கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயம், கைதடிப் பிள்ளையார் ஆலயம் ஆகியவற்றுக்கு அருகிலேயே இக்கசிப்பு விற்பனை இடம்பெறுவதாகவும் கூறப்படுகிறது.

எனவே இவ்விடயத்தில் கிராம சேவையாளர், பாடசாலைச் சமூகம் மற்றும் ஆலய பரிபாலனசபை ஆகியன கவனமெடுத்து இதற்கான நடவடிக்கை மேற்கொள்ள முன்வர வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(203-288)




அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் வடக்கு , கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சினால் ஜி.ரி.இசற் நிறுவன அனுசரணையுடன் பரிகாரக் கற்பித்தல் செயலமர்வு நடத்தப்பட்டது. இச்செயலமர்வின் நிறைவு நாள் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும் கலந்துகொண்ட வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் ப.செல்வராசா மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் பருத்தித்துறை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ரகுநாதன், மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி தபேந்திரராசா ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

## மோட்டார் சைக்கிள் பதிவுகள் கைதடியில் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.2

கைதடி மற்றும் நாவற்குழி ஆகிய இடங்களில் உள்ள மோட்டார் சைக்கள்களுக்கான மீள் பதிவுகள் தற்போது மீண்டும் நடைபெற்றுவருகின்றன

கைதடி பாலத்திற்கு அருகாமையில் இருக்கின்ற சிவில் நிர்வாக காரியாலயத்திலேயே கடந்தவாரம் தொடக்கம் இப்பதிவுகள் இடம்பெற்று வருகின்றன. பெருந்திரளான மோட்டார் சைக்கிள் உரிமையாளர்கள் இப்பதிவுகளை தினமும் மேற்கொண்டு வருவதைக் காணமுடிகின்றது

இதேவேளை கடந்த செப்ரெம்பர் மாதம் தனிச்சிங்களத்தில் பதியப்பட்ட "பாஸ்" தற்போது தனி ஆங்கிலத்திலே பதிந்து உடனுக்குடன் உரிமையாளர் களிடம் வழங்கப்படுவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது. (202-288)

## திருவாசக முற்றோதல்

சுழிபுரம், ஜன.2

வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் ஆலயமண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை திருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளது.

அத்துடன் திருவாசக நூல் ஊர்வலமும், மகேஸ்வரபூசையும் இடம்பெறவுள்ளன. (203-28)

* * *

சுழிபுரம் குடியிருப்பு வைத்தீஸ்வரன் ஆலயத்தில் எதிர் வரும் சனிக்கிழமை காலை 6 மணி தொடக்கம் திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது.பிற்பகல் ஒரு மணிக்கு சங்காபிசேகம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து மகேஸ்வர பூசை நடைபெறும். (203-28)

# மணற்காடு அகதிமுகாம் மலசல கூடங்கள்; 2 மாதங்களின் பின் துப்புரவுப் பணி ஆரம்பம்

கட்டைவேலி,ஜன.2

வடமராட்சி கிழக்கு, மணற்காடு முகாமிலுள்ள மலசலகூடங்கள் இரண்டு மாத கால இடைவெளிக்குப்பின்னர் கழிவுறுஞ்சியினால் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன.

இங்குள்ள 42 மலசல கூடங்கள் 'சோஆ' நிறுவனத்தின் நிதியுதவியுடன் பருத்தித்துறை பிரதேச சபையின் கழிவுறுஞ்சி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வந்தன. எனினும் கடந்த ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி முதல் இப்பணி நிறுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முகாமைச் சேர்ந்த மக்கள் இயற்கைக் கடன் கழிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். அத் துடன் இம்மலசலக்கூடங் களில் 10இற்கும் மேற்பட்ட மலசல கூடங்கள் கதவுகள் இன்றியும் சேதமடைந்தும் இருந்தன.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரிடம் முறையிட்டிருந்தனர்.

சமூக சேவைகள் சமூக நலத்துறை அமைச்சு குறிப்பிட்ட மலசலகூடங்களைப் துப்புரவு செய்யுமாறு பருத்தித்துறை பிரதேச சபையைக் கேட்டுக் கொண்டது. 'சோஆ' நிறுவனம் இப்பணிக்கு தொடர்ந்து நிதி உதவி வழங்குவதாகத் தெரிவித்திருந்தது. அத்துடன் மணற்காட்டு முகாமுக்கு கழிவுறுஞ்சி வாகனம் சென்று வர அனுமதி பெறப்பட்டுள்ளதாக சமூக சேவை, சமூக நலத்துறை அமைச்சு அறிவித்திருந்தது.

இதனையடுத்து இம்முகாம் மல சல கூடங்கள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் கழிவுறுஞ்சி மூலம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (1-275)

# பிராந்திய சுகாதாரப் பணிமனையில் கடன் கொடுப்பனவுக்குப் புதிய திட்டம்

குருநகர், ஜன.2

யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிமனையில் 10 மாத சம்பள முற்பணக் கடன்களைப் பெற்றுக் கொள்ள விண்ணப்பித்துள்ள ஊழியர்களின் கடன்களை வழங்குவதற்கு புதிய நடைமுறை பின்பற்றப்படவுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இக்கடன்களை வெகு விரைவில் ஊழியர்களுக்கு வழங்கும் நோக்குடன் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் யாழ். பிராந்திய சுகாதார சேவைப்பணிப்பாளர் தலைமையில் கணக்காளர், நிர்வாக உத்தியோகஸ்தர் பிரதான முகாமைத்துவ உதவியாளர் இடம்பெறுவர். இக்கடன்களைப் பெற விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் முன்னுரிமைக் கோரிக்கைகளை சமர்ப்பிக்கும் போது அதற்கான உண்மைச் சான்றிதழ்களை சமர்ப்பித்தால் இக்குழு இவர்களின் விணண்ப்பங்களை உரிய முறையில் பரிசீலித்து வடமாகாண சுகாதார அமைச்சில் இருந்து கிடைக்கும் நிதியின் படி சம்பளக்கடனை வழங்குமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (203-51)

## சாவகச்சேரி பிரதேசசபைக்கு புதிய செயலாளர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.2

சாவகச்சேரி பிரதேச சபை செயலாளராக வடக்கு - மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தால் வே.சிவராசலிங்கம் கடந்த மாதம் தொடக்கம் நியமிக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி பிரதேச சபை செயலாளராக பணியாற்றிய ந. பாலச்சந்திரன் வடக்கு - மாகாண உள்ளூராட்சி திணைக்களத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளார். (203-131)

## அபிராமி அந்தாதி செய்யுள் இலவசமாகப் பெறலாம்

சுழிபுரம்,ஜன.2

பஜனைச் சபையார் வெளியீடு செய்த புலவர் சாந்தானராமன் எழுதிய அபிராமி அந்தாதி செய்யுள் நாற்பத்தி நாலு, நாற்பத்தியாறு ஆகிய இரண்டு பாடல் வெளியீடும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

பாடல் ஆய்வுரையை தபாலில் பெற்றுக் கொள்ள விரும்புவோர் செயலாளர், பஜனைச் சபை, சுழிபுரம் என்ற முகவரிக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம். (203-28)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

CSC-ASIAN COMPUTER EDUCATION

O/L பரீட்சை எழுதிய மாணவர்கள் மற்றும் கணினி உயர்கல்வியில் ஆர்வம் உடையவர்களுக்கான

புதிய கணினி கற்கைநெறிகளுக்கான விசேட பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

O/L பெறுபேறுகளின் முன் விடுமுறைகாலத்தை சர்வதேச தரமிக்க தகவல் தொழில்நுட்பக் கல்வியை வழங்குவதில் இலங்கையில் தனித்துவம் மிக்க எமது நிறுவனத்துடன் இணைந்து பயனுள்ளதாக்குங்கள்.

விசேட சிறப்புச் சலுகை

பாடநெறிகள் யாவும் இங்கிலாந்து ICM, ACP, IMIS மற்றும் இந்திய CSC, TATA மற்றும் TALLY உயர்கல்வி நிறுவனங்களின் நேரடி அங்கீகாரம் பெற்றவையாகும்.



மேலதிக விபரங்களுக்கு எமது பயிற்சி மையங்களை நாடுங்கள்

ASIAN-CSC COMPUTERS

யாழ்ப்பாணம் ASIAN : 2G ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், Tel :021-222-5677.

யாழ்ப்பாணம் CSC : 101,2ᵈ மாடி ஸ்ரான்லி வீதி, (மக்கள் வங்கிக்கு மேலாக) யாழ்ப்பாணம், Tel: 021-222-3196.

நெல்லியடி ASIAN : கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel :077-3122198



## 1st in Com, G.A.Q.
## யாழ்., பேராதனை பல்கலைக்கழகம் (வெளிவாரி)

* A/L கலை, வர்த்தகம், விஞ்ஞானம், கணிதம் என்பவற்றில் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்களும் மேற்குறிப்பிட்ட பட்டப் பாட நெறிகளுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர்.
* இப்பிரிவுகளுக்குரிய விரிவுரைகள்

**ஆரம்பம் 05.01.2008 மு.ப. 8மணி**

குறிப்பு:- பேராதனைப் பல்கலைக்கழகத்தினால் புதிய ஆண்டிற்கான பதிவுகள் கோரப்பட்டுள்ளன.
இவற்றுக்கான பதிவுகள் எமது நிறுவனத்தினூடாக நடைபெறுகின்றன.

நிர்வாகி: புதிய உயர்கல்லூரி
S.அருள்நங்கை. ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (69558)


## கண்ணீர் அஞ்சலி



வடமராட்சி, கரணவாய் வடக்கு சக்கலாவத்தையைச் சேர்ந்த முன்னாள் இராமநாதன் நுண்கலைக் கல்லூரி பகுதிநேர விரிவுரையாளரும், பிரபல சங்கீத வித்வானும், எமது பெறாமகனுமாகிய

**பிரம்மஸ்ரீ கல்யாணசுந்தரக் குருக்கள் இராமநாதசர்மா**


அவர்கள் 30.12.2007 அன்று கொழும்பில் அமரரானதை அறிந்து மிகவும் வேதனையடைகின்றோம்.

அன்னாரின் மறைவினால் துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொண்டு அவர்களிற்கு ஆறுதல் கூறுவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

33, கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (69574)
பிரம்மஸ்ரீ சி.சர்வேஸ்வரசர்மா குடும்பத்தினர்.

## 14ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 . 08 . 1937



சிவபதம் 06 . 01 . 1994

**அமரர் சங்கரப்பிள்ளை நமசிவாயம்**
(உரிமையாளர், அம்பிகா டிஸ்பென்சரி)

எங்கள் குடும்பத் தலைவரே!
நீங்கள் பகிர்ந்துகொண்ட அன்பு
அறிவு, அறம், ஆற்றல் அநுபவங்களில்
நாம் வாழ்கிறோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
நுணாவில் சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்

அம்பிகா டிஸ்பென்சரி, சாவகச்சேரி. (69561)
குடும்பத்தினர், சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் விஜயேந்திரன்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் விஜயேந்திரன் 23.12.2007 அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - சின்னத்தங்கம் தம்பதியரின் மகனும், மகாலட்சுமியின் (ஜேர்மனி) அன்புக் கணவரும் மஞ்சு (ஜேர்மனி), விஜி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மனோன்மணி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, இராசேந்திரம், நாகேந்திரம் ஆகியோரின் சகோதரனும் பாக்கியம், இரத்தினசபாபதி, இரத்தினம் காலஞ்சென்ற பூபாலபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (03.01.2008) வியாழக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பருத்தித்துறை வீதி, 3ஆம் கட்டை, கட்டப்பிராய்.
செ.இரத்தினசபாபதி (மைத்துனர்)
மனோன்மணி (சகோதரி).

## நூலக வசதிகளற்ற பாடசாலைகளின் விவரம் திரட்டப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜன.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் இதுவரை நூலக வசதிகள் இல்லாத பாடசாலைகளின் விவரங் கள் திரட்டப்படுகின்றன.

தேசிய நூலக ஆவணமாக்கல் சேவைகள் சபையின் வேண்டுகோளுக்கிணங்க மாகாணக் கல்வி அமைச்சினால் விவரங்கள் கோரப்பட்டுள்ளன.

படிவங்களை பூர்த்தி செய்து எதிர்வரும் ஐந்தாம் திகதிக்கு முன்னர் வலயக் கல்வி அலுவலகத்தில் கையளிக்குமாறு பாடசாலை அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (203-207)

## பாராட்டுகின்றோம்

2007/2008ஆம் ஆண்டுக்கான காலபோக நெற்செய்கைக்கு உரிய பசளை வகைகளையும் விதை நெல்லையும் உரிய நேரத்தில் உரியமுறையில் விவசாயிகளுக்கு தற்போதைய நாட்டு சூழ்நிலையிலும் பலசிரமங்களுக்கு மத்தியிலும் தந்து உதவிய கமத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளருக்கும் உரும்பிராய் பெரும்போக உத்தியோகத்தருக்கும் எமது கோப்பாய் தெற்கு விவசாய சம்மேளனத்தின் சார்பில் நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தலைவர்.

விவசாய சம்மேளனம்,
கோப்பாய் தெற்கு.


## A/L - 2009 - GROUP CLASSES ENGLISH MEDIUM

ACCOUNTING AND ECONOMICS TEACHER WITH FOREIGN TEACHING EXPERIENCE
M.J.RAJARATNAM (0602214151)
2/2, 1ST LANE MARUTHADY ROAD, JAFFNA. (68707)

## உடன் விற்பனைக்கு

Classic A/C (MULT FICTER SYSTEM) லுமாலா சைக்கிள் (1முக்கா சைக்கிள், டொல்பின் கேபிள் பிறேக் மொடல்) லெவல்சீற் 8 என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 766, வேலன் விலாஸ், தட்டாதெருச் சந்தி (69566)

## பாடசாலை வான் சேவை

புன்னாலைக்கட்டுவன், ஊரெழு, உரும்பிராய் ஆகிய இடங்களிலிருந்து இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி சர்வதேசப் பாடசாலை மானிப்பாய் ஆகிய பாடசாலைகளுக்கு
தொடர்புகளுக்கு: து.உதயகுமார், வைத்தீஸ்வரா வீதி, உரும்பிராய் மேற்கு.
T.P 060 2214116 (69559)


## தவறிவிட்டது

ஐந்து சந்திக்கும் ஆனைக்கோட்டை பிடாரி கோயிலுக்குமிடையில் இரண்டு பவுண் கைச் செயின் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து றாஜீவ், நவாலி வீதி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங் கப்படும். (69581)


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்தவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (69553)

## வேலைஆள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் மின்னியல் நிறுவனம் ஒன்றுக்கு மின்னியல் உபகரணம் திருத்துவதற்கு வேலை ஆள்கள் தேவை. அனுபவம் தகைமை என்பவற்றுடன் ஏழு நாள்களுள் விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
விள.இல.3043, மே/பா. உதயன்.(சி/54879)


## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி அரியரத்தினம்

(தாவடி)




கொக்குவில், தாவடியைப் பிறப்பிட மாகவும் வாழ்விடமாக வும் கொண்டதிருமதி மகேஸ்வரி அரியரத்தினம் 31.12.2007 திங்கட் கிழமை இறைபதம் எய்தினார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்:-
செ.அரியரத்தினம் (கணவர்)
மானிப்பாய் வீதி, தாவடி, கொக்குவில். (சி/54787)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



மகாஜனக் கல்லூரியின் புகழ்பூத்த பழைய மாணவர்களில் ஒருவரான
பேராசிரியர்
**நாகலிங்கம் சண்முகலிங்கன்**
அவர்கள்
யாழ்.பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு மகாஜனச் சமூகம் பெருமையடைகின்றது.

அவரது கல்லூரி வாழ்க்கையில் இசை, இயல், நாடகத் துறையில் காட்டிய திறன்கள் இன்றும் கல்லூரிச் சமூகத்தின் பதிவுகளில் இருந்துவருகின்றன. அவரது காலப்பகுதியில் யாழ்.பல்கலைக்கழகம் சகல துறைகளிலும் வளர்ச்சி காண எமது கல்லூரிச் சமூகம் வாழ்த்தி நிற்கின்றது.

கல்லூரிச் சமூகம்,
**யா/மகாஜனக் கல்லூரி**
தெல்லிப்பழை. (69570)

## ஸ்ரீ மூத்தநயினார் கோயிலும் சத்திரமும் ஆனைக்கோட்டை

### முக்கிய அறிவித்தல்

ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலுக்கும் சத்திரத்திற்குமுரிய தர்ம சொத்துக் காணிகளை சட்டவிரோதமான முறையில் வாங்குதல், விற்றல், அத்துமீறி குடியேறுதல் என்பன தடைசெய்யப்பட்டதோடு வருடாவருடம் வாடகை/குத்தகைப் பணம் கட்டத் தவறியவர்கள் தங்கள் உரிமைகளை இழந்தவராகக் கணிக்கப்படுவர்.

முகாமையாளர்.

ஸ்ரீ மூத்தநயினார் கோயில்,
ஆனைக்கோட்டை. (69556)

## கண்ணீர் அஞ்சலி



எமது சனசமூக நிலையத்தின் நிர்வாக உறுப்பினர் குமாரசாமி நந்தகுமார் அவர்களின் பாசமிகு தம்பியும் எமது சனசமூக நிலைய உறுப்பினருமான

**குமாரசாமி ஸ்ரீகுமார்**

அவர்கள் 24.12.2007 அன்று இந்தோனேசியாவில் மரணமடைந்தமையையிட்டு அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கரம்பைக்குறிச்சி மேற்கு, குருக்கள் குடியிருப்பு, வரணி.
கந்தா சனசமூக நிலையத்தினர். (69570)

## 35ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணுக்கு வந்தநாள் 09 ★ 09 ★ 1951



விண்ணுக்கு சென்றநாள் 29 ★ 11 ★ 2007

**அமரர் சின்னத்தம்பி தில்லைநடராஜா**
(முன்னாள் லிகிதர் புகையிரத திணைக்களம், மருதனை, முகாமையாளர், றோயல் வைன் ஸ்ரோர்ஸ்)

*முப்பத்தைந்து தினங்கள் கடந்தும் - உங்கள்*
*முகத்தினை மறக்க முடியவில்லை*
*ஏங்கித் தவிக்கின்றோம் எப்போது வருவீர்களென்று ... !*
*எங்கள் வாழ்விற்கு - நல் வழிகாட்டிய*
*உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து நிற்கின்றோம்.*

எங்கள் குடும்பத் தலைவனை இழந்து நின்ற வேளையில் எமது துயரில் பங்கு பற்றிய அனைவருக்கும் நன்றிகளைக் கூறிக் கொள்வதோடு இன்று (02.01.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புரிமையோடு அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)

179/5, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். (68573)
மனைவி, பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தை இனிக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும் இங்கு புலிகளுக்கு செங்கம்பள வரவேற்பு தரப்படுகிறது

## ஜெயலலிதாவின் கவலை இது



சென்னை,ஜன.2

விடுதலைப் புலிகளுக்கு தமிழகத்தில் செங்கம்பள வரவேற்பு அளிக்கப் பட்டு வருவதாக சாடியுள்ளார் அ.தி.மு.கவின் பொதுச் செயலர் செல்விஜெயலலிதா.

தமிழகத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

"சில தலைவர்கள் விடுதலைப் புலிக்ளுக்கு ஆதரவாகச் சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கின்றனர். விடுதலைப் புலிகளை நான் மட்டும் கடுமையாக எதிர்க்கிறேன். இது குறித்து, எதிர்காலத்தில் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். தமிழகத்தை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்" - என்று ஜெயலலிதா கூறுகின்றார்.

அ.தி.மு.க.தலைமை அலுவலகத்தில் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்தோர் கடந்த ஞாயிறன்று அ.தி.மு.கவில் இணைந்து கொண்டனர். இந்த நிகழ்வுக்குப் பின்னர் ஊடகங்களுக்கு வழங்கிய செவ்விலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் ஜெயலலிதா.

கேள்வி:-'தமிழகத்தில், விடுதலைப் புலிகள் நடமாட்டம் இல்லை' என்று தென் மண்டல இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனரே?

பதில்:-உண்மைக்கு புறம்பானவற்றை சொல்வது கண்டிக்கத்தக்கது. வருந்தக் தக்கது.

கேள்வி:-தமிழகத்தில் ஐந்து தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டிருக்கின்றமை குறித்து?

பதில்:- இது அதிர்ச்சி அளிக்கக்கூடியது. அ.தி.மு.க., ஆட்சியில் மாவோயிஸ்ட் தீவிரவாத இயக்கத்தை தடை செய்தோம். இப்போது புலிகள் நடமாட்டம் இருக்கிறது என்பதன் மூலம் தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு அடியோடு கெட்டுவிட்டது; சீரழிக்கப்பட்டு விட்டது.

கேள்வி:-தமிழகத்தில் விடுதலைப்புலிகளும், தீவிரவாதிகளும் தொடர்ந்து செயல்பட்டு வருகின்றனர் என நீங்கள் சொல்கிறீர்கள். ஆனால், விடுதலைப் புலிகளையும், தீவிரவாதிகளையும் கைது செய்துள்ளோம் என்று பொலிஸ் சொல்கிறதே?

பதில்:- ஒரு புறம், விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக இருப்பவர்கள் தீவிரமாக நடந்து கொள்கின்றனர். ஆனால், சட்டப்படி நடவடிக்கை எடுப்போம் என்று பொலிஸ் சொல்கிறது. சில தலைவர்கள் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக சிவப்புக் கம்பளம் விரித்து வரவேற்கின்றனர். விடுதலைப் புலிகளை நான் மட்டும் கடுமையாக எதிர்க்கிறேன். இதுகுறித்து, எதிர்காலத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தமிழகத்தை கடவுள் தான் காப்பாற்ற வேண்டும் என்று பதிலளித்தார் ஜெயலலிதா.

# டுபாய் விமான நிலையத்தில் இலங்கைப் பெண் மரணம்

கொழும்பு,ஜன.2

குவைத் நாட்டில் இருந்து இலங்கை திரும்பிக்கொண்டிருந்த பெண் ஒருவர் டுபாய் விமானநிலையத்தில் பெண்கள் ஓய்வுக்காகத் தங்கும் அறையில் மர்மமான முறையில் உயிரிழந்திருக்கிறார்.

குவைத் நாட்டில் இருந்து விமானம் மூலம் நாடு திரும்பிய இவர் பின் அங்கிருந்து விமானம் மூலம் டுபாய் விமான நிலையத்தைச் சென்றடைந்தார்.

அங்கு இலங்கைக்கான விமானத்தில் பயணம் செய்வதற்காகக் காத்திருந்த வேளை உயிரிழந்து கிடந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட பெண் மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டது.(சி)

# 2008ஆம் ஆண்டு முடிவுக்குள் பயங்கரவாதத்தை ஒழிப்போம்

## நம்பிக்கை வெளியிடுகிறார் பிரதமர்



கொழும்பு,ஜன.2

"நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டி 2008ஆம் ஆண்டு முடிவுக்குள் நாட்டு மக்களை நிம்மதியாக வாழவழிவகுப்போம்."

- இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா அறிவித்துள்ளார்.

அகில இலங்கை பௌத்த தர்ம பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள பெலமதுளை கங்கந்த தேசிய பாடசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மேலும் அங்கு கூறியுள்ளவை வருமாறு:-

இராணுவத்தினரின் வெற்றி வருடமாக 2007 ஐ அடையாளப்படுத்த முடியும். பயங்கரவாதத்தை ஒழிக்கும் பொருட்டு 2007ஆம் ஆண்டு இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக முடிந்துள்ளன. 2008ஆம் ஆண்டிலும் பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைகளை படையினர் மேற்கொள்ளவுள்ளனர். திட்டமிட்ட இந்த நடவடிக்கையினால் பயங்கரவாதத்தை முழுமையாக ஒழிக்க முடியும் எனவும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நம்பிக்கை தெரிவித்தார். (சி)

# கூட்டிணைந்து செயற்படுவதற்கு இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம் முடிவு

கொழும்பு,ஜன.2

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் விரைவில் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு மற்றும் இலங்கை இதழியல் கல்லூரி ஆகியவற்றின் பணிப்பாளர் சபையில் இணைந்துகொள்ளவிருக்கின்றது.

அத்தகவலை இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவர் சனத் பாலசூரிய 2007 டிசம்பர் 18ஆம் திகதி இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் நடைபெற்ற வைபவத்தின்போது ஊடக சுதந்திரமும் சமூகப் பொறுப்புணர்ச்சியும் மற்றும் ஊடக தொழில் துறையின் தரத்தை மேம்படுத்துவதற்கான விடயங்கள் அடங்கிய கொழும்பு பிரகடனத்தில் கையொப்பமிட்டதன் பிரதிபலனாக இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டிருக்கின்றது.

கொழும்பு பிரகடனமானது 1998ஆம் ஆண்டு கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச ஊடக மாநாட்டின் முடிவில் வெளியிடப்பட்டதாகும். ஊடக சுதந்திரமும், சமூகப் பொறுப்புணர்ச்சியும் மற்றும் ஊடகத் தொழில் துறையின் தரத்தை மேம்படுத்துவதற்கான விடயங்களை இப்பிரகடனம் உள்ளடக்கியதாக அமைந்திருக்கின்றது. இந்த மாநாடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம், பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம் மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் ஆகியவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டதாகும்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கமும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு குறித்த பிரகடனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களுக்கு இணக்கம் தெரிவித்திருந்தபோதும் அப்போது அதில் கையொப்பம் இட்டிருக்கவில்லை.

இந்தப் பிரகடனத்தில் ஏற்கனவே கையொப்பமிட்டுள்ள இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் சங்கம், பத்திரிகை வெளியீட்டாளர் சங்கம் மற்றும் சுதந்திர ஊடக இயக்கம் என்பன இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனம்,இலங்கைப் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு மற்றும் இலங்கை இதழியல் கல்லூரி ஆகியவற்றின் பணிப்பாளர் சபைகளில் அங்கத்துவத்தைப் பெற்றிருக்கின்றனர். - என்றுள்ளது. (சி)

# தீர்வு யோசனை அறிக்கையை 15ஆம் திகதிக்குள் முன்வைக்குக!

## அமைச்சர் திஸ்ஸ விதாரணவுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு,ஜன.2

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வொன்றை முன்வைப்ப தற்காக நியமிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு அறிக்கை ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் விசேட கட்சித் தலைவர்கள் மாநாடொன்றைக் கூட்டி உத்தேச தீர்வு தொடர்பாக இறுதித் தீர்வு எடுக்கப்படுமென அறியக் கிடைக்கிறது.

இந்த அறிக்கையை இம்மாதம் 15ஆம் திகதி தமக்குக் கிடைக்கச் செய்யுமாறு ஜனாதிபதி அனைத்துக் கட்சிப் பிரதி நிதிகள் குழுவின் தலைவரான அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரணவுக்கு அறிவித்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

தற்போதுள்ள நிலையில் அரசமைப்பை மீளாய்வு செய்து தீர்வொன்றைக் காண்பது நடைமுறைச் சாத்தியமற்றது. ஆகையால், 13ஆவது அரசமைப்பு மீளாய்வின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகார வரையறைக்குள் ஆகக்கூடிய அதிகாரத்தைப் பகிரும் யோசனையை முன்வைப்பதற்கு இடமிருக்கிறது என அனைத்துக் கட்சி மாநாட்டு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

# 2008இல் உங்களது பலன்கள்...



மேடம்

இந்தப் புதிய வருடத்தில் உங்கள் ராசிப்படி மூன்று திரிகோணாதிபதிகளின் சந்திப்பு உண்டாவதால் நீங்கள் புகழின் உச்சிக்குச் செல்வீர்கள் என்றால் மிகையாகாது. நிதி நெருக்கடி உண் டாகாமல் செலவுகளைச் செய்து சமாளிப்பீர்கள். குடும்பத்தில் சுபச் செலவுகள் உண்டாகும்.

உங்கள் எண்ணங்கள் பல திசைகளில் விரிந்து செல்லும். இதனால் புதிய முயற்சிகளைச் செயற்படுத்துவீர்கள். உங்கள் குறிக்கோள்களைத் திட சிந்தனைகளுடன் செயல்படுத்தக் கூடிய வழிமுறைகளை ஆராய்ந்து, உறுதியுடன் செயற்படுத்தி வெற்றி காண்பீர்கள்.

அதே சமயம் லாபஸ்தானத்தில் இருந்தாலும் சரி ராசிக்கு பாதக ஸ்தானத்தில் உள்ள ராகு பகவான் உங்களை தொன்று தொட்டுக் கடைப்பிடித்து வரும் வழிகளிலிருந்து மாறுபட்டுச் செயற்படத் தூண்டுவார். அதனால் உங்கள் உள்ளுணர்வு களுக்கு ஏற்ப நடந்து கொள்ளாமல், நன்கு சிந்தித்துச் செயற்படுவது அவசியமாகும்.

அதே சமயம் தொழில் ஸ்தானாபதி வர்கோத்தாம்சத்தில் அமர்ந்திருப்பதால், நீங்கள் சிரமப்பட்டு செய்யும் செயல்கள் உங்களைப் பெரிய அளவிலான வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்லும்.

வழக்கு விவகாரங்களில் அனுகூலமான திருப்பங்களைக் காண்பீர்கள். பெற்றோர் வழியில் இருந்து வந்த மனக் கசப்புடன் மறைந்து, குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். புத்திர ஸ்தானத்தில் உள்ள சனி பகவானை குரு பகவான் பார்ப்பதால், உங்கள் குழந்தைகளின் முன்னேற்றத் திற்கு அடித்தளம் ஏற்படுத்தும் வருடமாக இந்த ஆண்டு அமையும்.

உத்தியோகஸ்தர்களுக்கு அலுவலகப் பணிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். எதிர் வரும் இடையூறுகளைச் சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். மேலதிகாரிகள் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வார்கள். சக ஊழியர்கள் உதவி யோடு உங்கள் பணிகள் சிறப்பாக முடியும்.

அலுவலகத்தில் உங்கள் பெயரும், புகழும் உயரும். பண வரவு சரளமாக இருக்கும். உடல் சோர்வு உண்டாகாமல் இருக்க, தினமும் மனதிற்கினிய உடற் பயிற்சிகளை மேற்கொள்ளுங்கள். மற்ற படி இந்த ஆண்டு சோதனைகளை வென்று சாதனைகளைப் படைப்பீர்கள்.

வியாபாரிகள் போட்டிகளையும், பொறாமைகளையும் சந்திப்பார்கள்; எனினும் பொறுமையுடன் இருந்து அவற்றை வென்று, நல்ல லாபம் காண்பீர்கள்.

விசாயிகளுக்கு இந்த ஆண்டு தோட்டம், தோப்பு உள்ளிட்ட விவசாயப் பணிகள் அனைத்தும் சுமுகமாகவோ முடியும் உழைப்புக் தகுந்த பலன் கிடைக்கும்.

கலைத்துறையினர் புகழைத் தக்கவைத்துக் கொள்வார்கள். புதிய வாய்ப்புக்களையும் பெறுவார்கள். அதேசமயம் அவற்றைச் செயற்படுத்தும் காலங்களில் சிறு தியாகங்களையும் செய்ய நேரிடலாம்.

பெண்மணிகள் குடும்பத்தில் அமைதியைக் காண்பார்கள். வெளி ஊரில் இருந்து இனிப்பான செய்திகள் வரும். கணவருடனாக ஒற்றுமைகளில் சில பிரச்சினைகளில் ஏற்படும். எனவே வீண் வாக்குவாதங்களில் ஈடுபடுபதைத் தவிர்கவும்.

மாணவ மணிகளுக்கு கல்வியில் நாட்டம் அதிகரிக்கும். உங்கள் தன்னம்பிக்கை உயரும். வருங்கால திட்டங்களுக்கு அத்திவாரம் போடுவதற்கான சூழ்நிலை உருவாகும்.

# ஹோமகம பொலிஸ் நிலையத்தில் சூட்டுச் சம்பவம்; இருவர் காயம்

கொழும்பு, ஜன.2

ஹோமகமப்பகுதி பொலிஸ் வளாகத்துக்குள் திங்கட்கிழமை காலை இனந் தெரியாத நபர் ஒருவர் பொலிஸார் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் காயமடைந்தார். பதிலுக்கு பொலிஸாரும் சூடு நடத்தியதில் அந்நபரும் படுகாயமடைந்திருக்கிறார் என்று தெரியவந்திருக்கிறது.

பல கொலைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் இந்த நபர் பொலிஸாரால் நேற்று அதிகாலை கைதுசெய்யப்பட்டிருந்தார். அதன் பின்னர் அந்நபர் வைத்திருந்தார் என்று கூறப்படும் சைக்கிள் ஒன்றில், தான் துப்பாக்கி ஒன்றை மறைத்து வைத்திருப்பதாகக் கூறியதையடுத்து பொலிஸார் குறித்த சைக்கிளை நோக்கிச் சென்ற போது, அந்த நபர் மறைத்து வைத்திருந்த துப்பாக்கியால் பொலிஸார் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டார் என்று ஹோமகமப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் கயாமடைந்தவர்களான பொலிஸ் கான்ஸ்டபிள் மற்றும் சந்தேக நபர் ஆகியோர் தற்போது சிகிச்சைக்காக ஹோமகம வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். இது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சி)

# தொண்டு நிறுவனத் தலைவர் ஒருவருக்கு நாட்டை விட்டு வெளியேறுமாறு உத்தரவு

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸின் தலைவர் பீட்டர் ஹில்லைத் தொடர்ந்து தற்போது 'பேர்கொவ் பவுண்டேஷன்' எனும் அரச சார்பற்ற அமைப்பின் தலைவர் நோர்போர்ட் ரொப்பெர்ஸையும் நாட்டை விட்டு வெளியேறுமாறு அரசு கேட்டுள்ளது.

நோர்பேர்ட் ரொப் பெர்ஸ் உடனடியாக நாட்டிலிருந்து வெளியேறுமாறு கேட்கப்பட்டுள்ளார். அவருக்கு 20 நாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது எனவும் - பாதுகாப்புக் காரணங்களுக்காக அவரது விஸா புதுப்பிக்கப்படவில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் நல்லாட்சிக்கு ஊறு செய்யும் நோக்கில் இவர் செயற்பட்டு வருகிறார் என இவர் குறித்து சமீபத்தில் ஜே.வி.பி. கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த மே மாதம் அரச சார்பற்ற அமைப்புகள் குறித்து ஆராயும் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் தோன்றுவதற்கு ரொபேர்ஸ் மறுத்திருந்தமை சர்ச்சையைத் தோற்றுவித்திருந்தது.

இவை இவ்வாறு இருக்க ரொபேர்ஸ் ஏற்கனவே இலங்கையிலிருந்து வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொருளியற் கல்லூரி

பெருமாள் கோயில் அருகில் நாவலர் றோட், யாழ்ப்பாணம். ⟷ இரு இடத்திலும் ⟷ இணுவில் மத்திய கல்லூரி அருகில் கே.கே.எஸ். வீதி, இணுவில்.

A/L 2010

### கலை, வர்த்தகப் பிரிவுகள்

(சனி - ஞாயிறு)

நீங்கள் நன்கு அறிந்த யாழ். நகரின் பிரபல்யம் மிக்க ஆசிரியர் குழுவினால்


| A/L 2010 | யாழ்ப்பாணம் | இணுவில் |
|---|---|---|
| பொருளியல் | சுதாகரன் | சுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக் கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்து நாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெயச[illegible] |
| அரசியல் | றஜீவன் | சுகாஷ |
| இந்து சமயம் | தரன் | தரன் |
| கிறிஸ்தவம் | ஜெயமோகன் | ஜெயமோகன் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| நாட. அரங்கியல் | கணேஷ் | கணேஷ் |
| ஆங்கிலம் | நிஷாந்தன் | நிஷாந்தன் |

யாழ்.நகரில் ஆரம்பம் → 05.01.2008 சனி 9.30 a.m

இணுவிலில் ஆரம்பம் → 06.01.2008 ஞாயிறு
கலைப் பிரிவு 9 a.m
வர்த்தகப் பிரிவு 2 p.m

நீங்கள் விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதிகளை பெற்றுக்கொள்ளவும். (சி/54881)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அமரர்
### கதிரவேலு சின்னத்துரை

மண்ணின் மடியில் 12.05.1933 — இறைவன் அடியில் 03.12.2007


ஒரு கூட்டுப் பறவைகளாய் கூடியிருந்தோம் ஐயா
உறவு கொண்டு மாளிகையில் குலவியிருந்தோம்
மகிழ்வோடு நாமிருந்த வேளையிலே காலனவன் எம்
மனையின் காவலனாம் உமைப் பிரித்தானே
எங்கள் குலவிளக்கே நாயகனே!
எமைக் காத்து அவனியிலே உயர வைத்தீர்
எமை விட்டு ஏனோ நீர் தூரம் சென்றீர்
ஏங்குகின்றோம் வாடுகின்றோம் எங்கள் ஐயா
மாதம் ஒன்று ஆனபோதும் உங்கள் நினைவு எம்
மனதை விட்டு நீங்காது என்றும் வாழும்

இன்று (02.01.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

40/1, குறுக்குத் தெரு,
நல்லூர், யாழ்ப்பாணம். (69596) - குடும்பத்தினர்.

## 73 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 10 - 10 - 1934



மறைவு 22 - 10 - 2007

அமரர்
### சின்னப்பிள்ளை சுப்பிரமணியம் (J.P)

(முன்னாள் உத்தியோகத்தர், கைதடி அரசினர் முதியோர் இல்லம், தலைவர், கைதடி மேற்கு ப.நோ.கூ.ச., தலைவர், யாழ்.விவசாய நுகர்ச்சி கூ.சங்கங்களின் சமாசம், உபதலைவர், யாழ். மாவட்ட கூட்டுறவு கிராமிய வங்கிகளின் சமாசம், சமூக சேவையாளரும்)

இன்று (02.01.2008) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள், கூட்டுறவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கைதடி தெற்கு, கைதடி. (69584) - குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி
### கிரிசாம்பாள் இராசரத்தினம் (குஞ்சு)

(நந்தாவில் அம்மன் கோவிலடி)



கொக்குவில் கிழக்கு கோயில்வீதியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிரிசாம்பாள் இராசரத்தினம் நேற்று (01.01.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இராசரத்தினத்தின் மனைவியும், காலஞ்சென்ற கனகரத்தினம் - நாகம்மா தம்பதியினரின் ம[illegible], காலஞ்சென்றவர்களான [illegible] கத்தைச் சேர்ந்த கந்தையா- சின்ன[illegible] தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற குணபாலசிங்கத்தின் (பாலு) சகோ[illegible]தரியும், சுே[illegible] சுபேன் (Micro Pc-Jaffna), சும[illegible]ணன் ஆ[illegible]யாரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.01.2008) புதன்கிழமை பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல: 122/3,
கோவில் வீதி,
கொக்குவில்.

தகவல்:
க.இராசரத்தினம்
(கணவர்)

## நன்றியுடன்...

கடந்த (28.12.2007) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்ப விளக்கு



### ஆனந்தமணி யோகநாதன்

அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து பாச உள்ளங்களுக்கும் எமது நன்றியைச் சமர்ப்பணம் செய்கிறோம்.

தகவல்:
சகோதரன் மு.ஆ.பஞ்சநாதன்
மகள் - படிச்சா
மகன் - சுதர்சன் (ஆசிரியர், ஆங்கிலம்)
218/10, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (69592)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்.உயர் தொழில்நுட்பக்கல்வி நிறுவன ஊழியர் பாக்கியநாதன் செபராஜன் அவர்களின் அன்புத் தாய்

திருமதி
### பாக்கியநாதன் நடேஸ்வரி

அவர்கள் காலமாகிய செய்தி கேட்டு அதிர்ச்சியும் வேதனையும் அடைந்துள்ளதுடன் அமரரின் பிரிவினால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனச் சமூகம். (69591)

## கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு, மடத்துவெளி பாலசுப்பிரமணிய தேவஸ்தான அறங்காவலரும், சிதம்பரம் புண்ணிய நாச்சியார்மடம் கட்டுமானப்பணியில் முன்னின்று உழைத்தவரும், சிறந்த சமூக சேவையாளருமாகிய வி. இராமநாதன் (VRM) அவர்களின் அன்புத்துணைவியார்

### திருமதி புஸ்பமணி இராமநாதன்

அவர்களின் மரணச்செய்தி கேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம். அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]
16, மணிக்கூட்டு ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (69587)

## கண்ணீர் அஞ்சலி



### தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்)

01.01.2008 அன்று அகாலமரணமான முன்னாள் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் ஆழ்ந்த கவலையும் அடைகின்றோம்.

அன்னாரை இழந்து தவிக்கும் மனைவி, மக்கள் மற்றும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சுப்பிமணியப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில்,
தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம்,
ஸ்ரீமுருகன் கல்நாரிழைப் படகுத் தொழிற்சாலை,
தோப்புக்காடு, காரைநகர். (69593)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### குமாரசாமி தயாபரன்

தோற்றம் 18.12.1965 — மறைவு 13.01.2007

எங்கள் குலதெய்வமே!
மண்ணில் நாம் வாழ வழி அமையும்
நேரம், எம்மை மீளாத்துயரில்
ஆழ்த்திவிட்டு ஏனோ
விண்ணுலகம் சென்றீர்?
என்றும் உங்கள் நினைவாகவே
இருக்கின்றோம்.

இணுவில் மேற்கு,
இணுவில்.

மனைவி, மக்கள்.

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் கந்தையா (S.M.K)



குமரகோட்டம், கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் கந்தையா(S.M.K) நேற்று (01.01.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மாணிக்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அன்னமுத்து, கனகலிங்கம், ஆச்சிமுத்து, இராசலிங்கம், அப்புத்துரை மற்றும் தம்பிப்பிள்ளை, சுந்தரம்பிள்ளை, அன்னலக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராசமணியின் அன்புக் கணவரும், யோகேஸ்வரராசாவின் அன்புத் தந்தையும்செல்வராணியின் அன்பு மாமனும் பொன்னுச்சாமியின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2008) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ந.ப. 12 மணியளவில் காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமரகோட்டம்,
கோண்டாவில். (69588)

தகவல்:
க.யோகேஸ்வரராசா
(மகன்).

### பொன்னுத்துரை முத்துக்குமாரசாமி



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை முத்துக்குமாரசாமி நேற்று( 01.01.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம் தம்பதியரின் அன்பு மகனும், தனேஸ்வரி, இந்திராதேவி, காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் பத்மினிதேவி, தர்மராஜா,ஜெகானந்தன், பரமானந்தன் ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற செல்வரெட்ணம் மற்றும் யோகரெட்ணம், சிவானந்தம், கமலாதேவி, லலிதாம்பாள், சுதா ஆகியோரின் அன்புமைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2008) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்மன் வீதி கிழக்கு,
திருநெல்வேலி. (69583)

தகவல்:
பொ.தர்மராஜா (தறுமு - சகோதரன் - வர்த்தகர், திருநெல்வேலி).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# பிணம் தின்னும் சாத்திரங்கள்

*'பேயரசு செய்தால் பிணந் தின்னும் சாத்திரங்கள்!'* - துரியோதனன் சபையில் திரௌபதி கூறியவை என 'பாஞ்சாலி சபதத்தில்' பாரதியார் குறிப்பிட்ட இந்த வாசகம் தாம் இன்றைய அவல நிலையில் நினைவுக்கு வருகின்றது.

நாட்டில் இன்று நடக்கும் ஆட்சி முறையும் அதன் கீழ் இடம்பெறும் சம்பவங்களும் இதனைத்தான் உறுதிப்படுத்துகின்றன.

தமிழர்களின் உரிமைக்காகக் குரல் கொடுக்கும் மிதவாதத் தலைவர்கள் வரிசையாகக் கொன்றொழிக்கப்படுகின்றார்கள். அவர்கள் புலிகள் சார்புடையவர்கள் என்றாலும், எதிரானவர்கள் என்றாலும் ஈழத் தமிழர்களின் நியாயமான உரிமைக்குக், குரல் எழுப்புவார்களாயின் கொல்லப்படுவார்கள் என்பதுதான் இந்த நாட்டின் சட்டம் - சாஸ்திரம் - போலும்.

அதுவும் தமிழ்த் தலைவர்கள், இந்த இலங்கைத் தீவின் சட்டத்தை யாக்கும் உயர்பீடமான நாடாளுமன்றின் அங்கத்தவர்களாக இருக்கும்போதே படுகொலை செய்யப்படுவது என்பதும் சர்வசாதாரணமாகிவிட்டது.

அவர்கள் பெரும்பான்மைச் சிங்களவர்களின் பிரதான இரு கட்சிகளில் இருந்தால் கூட - அவர்கள் தமிழர்களின் உரிமை குறித்துக் குரல் எழுப்புவராயின் - உரிய பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது என்பது இப்போது நிதர்சனமாக உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் அரசுக்கு ஆதரவளிக்கும் தமிழ் அரசியல்வாதிகளுக்கு உச்சப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அரசினால், ஜனநாயகரீதியில் தமிழர்களுக்காகக் குரல் கொடுக்கும் ஏனைய மிதவாதத் தலைவர்களுக்கு, பாதுகாப்பை விலக்கி, அவர்களை ஆபத்தில் ஆழ்த்தத்தான் முடியும் என்பதும் இப்போது ஐயந்திரிபற நிரூபிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர்களின் நியாயமான உரிமைகளுக்காக - அவர்களுக்கு எதிராக பௌத்த, சிங்களப் பேரினவாத அரசுகளால் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அரச பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராக - குரல் எழுப்பிவரும் மனோ கணேசன் மற்றும் மகேஸ்வரன் போன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு திடீரென பெருமளவில் வெட்டிக் குறைக்கப்பட்டது. அரசுக்கு எதிராக வரவு - செலவுத்திட்டத்தின்போதும், அவசர காலச் சட்ட நீடிப்பு மீதான வாக்கெடுப்பின் போதும் எதிர்த்து வாக்களித்து, அரசைக் கடுமையாக விமர்சித்த குற்றத்துக்காக மனோ கணேசன் எம்.பி. நாட்டை விட்டு வெளியேற வேண்டியவரானார். மகேஸ்வரன் எம்.பி. உலகை விட்டே வெளியேற்றப்பட்டிருக்கின்றார்.

தமிழர் தம் அவலத்தை அகிலத்துக்கு எடுத்துரைத்த குற்றத்துக்காக ஜோஸப் பரராஜசிங்கம் எம்.பி. தேவாலயத்துக்குள் வைத்து கிறிஸ்மஸ் ஆராதனையின்போது சுட்டுக்கொல்லப்பட்டார். மகேஸ்வரன் எம்.பி. புதுவருட வழிபாட்டில் ஆலய வழிபாட்டின் பின்னர், உள்வீதியைச் சுற்றிக் கும்பிட்டுக் கொண்டிருந்தவேளை சுட்டுக் கருவறுக்கப்பட்டார். ரவிராஜ் எம்.பி. தலைநகர் கொழும்பில், பட்டப்பகலில், உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில் கொன்றொழிக்கப்பட்டார். இதேபோல முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரநேருவும் படுகொலை செய்யப்பட்டார்.

யாழ். குடாநாட்டில் கோரமாகத் தலைவிரித்தாடும் - படுகொலைகள், ஆள்கடத்தல்கள், கப்பம் கோரல்கள் போன்ற - மிக மோசமான மனித உரிமை மீறல்களின் பின்னணி குறித்து நாடாளுமன்றத்தில் முழு விவரங்களோடு அம்பலப்படுத்துவேன் என மூன்று நாட்களுக்கு முன் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலும், சிங்கள இணையத்தளத்துக்கு அளித்த பேட்டி ஒன்றிலும் கூறிய பின்னரே அவர் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டிருக்கின்றார்.

இந்த அறிவிப்பு -

இதற்கு முன்னர் தமிழர்களுக்கு எதிராகத் தலைநகரிலும் பிற இடங்களிலும் அரச அராஜகம் அரங்கேறிய போது அவற்றுக்கு எதிராகக் கொதித்தெழுந்து நாடாளுமன்றிலும் வெளியிலும் பட்டவர்த்தனமாகக் கடும் எதிர்ப்பைக் காட்டி வந்த மகேஸ்வரனின் உறுதியான போக்கு -

ஏற்கனவே ஒரு தடவை துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயங்களுடன் தப்பிய மகேஸ்வரனின் உயிருக்குப் பெரும் அச்சுறுத்தல் இருந்தபோதும் - அது குறித்து அண்மையில் கூட நாடாளுமன்றில் மகேஸ்வரன் சுட்டிக்காட்டிய நிலையில் - அவருக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பை வேண்டுமென்றே விலக்கி, அவரை ஆபத்தில் ஆழ்த்திய அரச பாதுகாப்புத் தரப்பின் சூழ்ச்சி நடவடிக்கையாகும்

கதிர்காமர் படுகொலைக்கும், நுகேகொடை குண்டு வெடிப்புக்கும் காரணமானவர்கள் யார் என்பது உறுதிப்படுத்தப்பட முன்னரே சூத்திரதாரிகளைக், 'கண்டுபிடித்து', கண்டித்து, நடவடிக்கை எடுத்து, விரைந்து செயற்பட்ட சர்வதேச சமூகம் இப்போது மகேஸ்வரன் படுகொலைக்கு என்ன செய்யப்போகிறது? வெறும் கண்டனத்துடன் அமைந்து விடப் போகின்றதா? அல்லது நியாயத்துடன் நடந்து கொள்ளப்போகின்றதா?

ரவிராஜ் படுகொலைக்கு 'ஸ்கொட்லண்ட்யார்ட்' பொலிஸாரைக் கூட்டி வந்து விசாரணை செய்வோம் என்று 'காதில் பூச்சுற்றியமை' போல, இப்போதும் சர்வதேசம் உட்பட சகலரின் காதிலும் அரசு வைக்கப் போகும் பூவைச் சந்தோஷமாகச் சூடிக்கொண்டு சர்வதேசம் வாளாவிருக்கப் போகின்றதா? சர்வதேசத்தின் பிரதிபலிப்பை நன்கு அவதானத்துடன் பார்த்திருக்கின்றார்கள் பாதிக்கப்பட்ட தரப்பினரான தமிழர்கள்.

# மகேஸ்வரன் படுகொலைக்குக் கண்டனம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

ஐ.தே.கட்சி எம்.பி. தி.மகேஸ்வரனின் படுகொலையை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மிகவும் வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

இக்கொலைக்கு அரசே முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டும். மிகவும் பாதுகாப்பு நிறைந்த கொழும்புப் பகுதியில் வைத்தே மகேஸ்வரன் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. நடராஜா ரவிராஜும் இவ்வாறே தான் கொழும்பில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

மகேஸ்வரனின் கொலைக்கு அரசே முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும். மகேஸ்வரன் பெரும்பான்மை இனக்கட்சியான ஐ.தே.கட்சியில் எம்.பியாக இருந்தபோதும் அவர் தமிழர்களுக்கு ஆதரவாகவே நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் செயற்பட்டார்

அவர் சில சந்தர்ப்பங்களில் தமிழர்களுக்காக அவரது கட்சிகளின் கொள்கையை மீறியும் செயற்பட்டிருக்கின்றார்.

நாடாளுமன்றில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணைக்கு ஆதரவாக ஐ.தே.கட்சி வாக்களித்த சந்தர்ப்பங்களில் கூட மகேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து அப்பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருக்கின்றார். மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு குறைக்கப்பட்டமையே அவரது கொலைக்குக் காரணம். அவரது பாதுகாப்பைக் குறைத்த அரசே இக்கொலைக்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும் - இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஈ.பி.டி.பி.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தனது கண்டனத்தில் தெரிவித்திருப்பதாவது:-

இன்று மலர்ந்திருக்கும் புத்தாண்டு, நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் கொண்டுவரவேண்டும் என எதிர்பார்க்கப்பட்டவேளையில், அதற்காக இன, மதவேறுபாடுகளைக் கடந்து அனைத்து மக்களும் வழிபாடுகள் செய்து கொண்டிருக்கையில் நண்பர் தி.மகேஸ்வரன் சுட்டுக்கொலை செய்யப்பட்டிருப்பது அதிர்ச்சியையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

அவரது சில கருத்துகள் ஏற்புடையதற்றதாக இருந்திருக்கலாம். ஆனால், அவர் விரும்பிய கருத்தைக் கூறுகின்ற உரிமை அவருக்கு உண்டு. அத்தகைய உரிமையை மதிக்கின்றோம். கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்வதை நாம் ஆயுதப் போராட்ட காலத்திலிருந்து ஒரு கொள்கையாகவே பின்பற்றி வருகின்றோம். இதையே நீண்டகாலமாக வலியுறுத்தியும் வருகின்றோம்.

துரதிஷ்டவசமாக கருத்துகளைக் கருவி கொண்டு அழிக்கின்ற சூழல் தொடர்ந்துகொண்டு வருகின்றது. அதற்கு நண்பர் மகேஸ்வரனும் பலியாகியிருக்கின்றார். அரசை விமர்சிப்பவர்களையும் தமது இழுப்புகளுக்கு இழுபட மறுப்பவர்களையும் புலிகள் கொலை செய்துவிட்டு பழியை எதிர்த்தரப்புகளின் மீது விழச்செய்யும் செயலில் ஈடுபட்டுள்ளனர். ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள் விழுத்தும் தந்திரமாகவே புலிகள் தொடர்ந்தும் இவ்வாறு கொலைகளைச் செய்து வருகின்றனர்.

ஏனெனில், ஏற்கனவே மகேஸ்வரனை தேர்தலில் போட்டியிடவேண்டாமென்று புலிகள் தடுத்து யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றியபோதும் கொழும்பில் தேர்தலில் போட்டியிட்டார். அவ்வேளையில், புலிகள் அவரைச் சுட்டனர். அச்சம்பவத்தில் அதிஷ்டவசமாக காயங்களுடன் மகேஸ்வரன் உயிர் தப்பினார்.

ஈ.பி.டி.பியாகிய நாம் அனைத்துக் கொலைகளையும் கண்டிக்கின்றோம். அனைத்துக் கொலைகளும் நிறுத்தப்படவேண்டும். மக்கள் அச்சுறுத்தலற்று இயல்புச் சூழலில் வாழவேண்டும். கொலைகளுக்கூடாக கருத்துகளை அழிக்கவோ தமிழ்மக்களுக்கு தீர்வையோ பெற்றுக்கொடுக்கமுடியாது. கடந்த கால வரலாறும் இதையே உணர்த்தியுள்ளது.

அமரர் மகேஸ்வரனின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தாருடன் நாமும் எமது ஆழ்ந்த துயரங்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

- இவ்வாறு ஈ.பி.டி.பி. கண்டனம் தெரிவித்துள்ளது.

### யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம். மகேஸ்வரன் எம்.பி.யின் படுகொலையைகண்டித்து விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

மகேஸ்வரன் எம்.பி.படுகெலை செய்யப்பட்ட சம்பவத்தை குடாநாட்டு மக்கள் சார்பில் நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். சிங்களக்கட்சி ஒன்றில் அங்கத்துவம் பெற்று இருந்தாலும் தனதுஇனஉணர்வை தக்கவேளைகளில் வெளிப்படுத்திய வீரன் மகேஸ்வரன். அந்த வீரத்துக்கு கிடைத்த பரிசு அவரது சாவு. தலை நகரிலுள்ள தமிழர்களின் நெருக்கடி வேளைகளில் எல்லாம் துணையிருந்த தோழனை ஒட்டுமொத்த தமிழ் சமூகம் இழந்துள்ளது. எமது பல்கலைக் கழகச் சமூகம் முன்னெடுத்த அமைதி வழி எதிர்ப்புணர்வுகளில் மகேஸ்வரனின் பங்கும் குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் இத்தனைகொடுமைகளை அனுபவிக்க காரணமான அவசர காலச்சட்டத்தை ஆரம்பம் முதலே எதிர்த்து வந்த மகேஸ்வரன் தனது நாடாளுமன்ற உரைகளில் எல்லாம் சிங்கள இனவாதப் போக்கை சாடியே வந்தார். கவனயீர்ப்பு வடிவங்களை தனது எதிர்ப்புக்களாக காட்டிய மகேஸ்வரன் இந்து சமய கலாசார அமைச்சராக இருந்த நாள்களில் செய்த அரும் பணிகளும் நினைவு கூரத்தக்கனவாகும். போராட்ட அரசியல் வரலாற்று பின்னணியில்லாது அரசியலில் திடீரெனப் புகுந்து வீசிய புயல், ஒளிர்ந்த சந்திரன் இன்று மாண்டது எனும் செய்தி தமிழர்கள் அனைவரையும் வெகுவாகவே பாதித்துள்ளது.

புனிதமான ஆலயப் பகுதியில் வைத்து மேற்கொள்ளப்பட்ட இப்படுகொலை, தமிழர்கள் மீதான அனுதாபத்தை மேன் மேலும் அதிகரிக்குமே தவிர ஒருபோதும் குறைந்துவிடப் போவதில்லை

# புலிகள் மீது அரசு குற்றச்சாட்டு!

கொழும்பு, ஜன. 02

பல நூற்றுக்கணக்கான மக்களுக்கு மத்தியில் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலில் வைத்து மகேஸ்வரன் எம்.பி. சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு தமிழீழ விடுதலைப் புலிகள்மீது குற்றஞ்சுமத்தியுள்ளது அரசு.

சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்ட சிறியரக (மைக்ரோ) பிஸ்டல், விடுதலைப் புலிகள் பயன்படுத்தும் வகையறாவைச் சார்ந்தது என்று கூறியே இந்தக் குற்றச்சாட்டை அரசு முன்வைத்துள்ளது.

''தற்சமயம் இடம்பெற்றுவரும் விசாரணைகளின்படி புலிகளே மகேஸ்வரன் கொலைக்குக் காரணம்'' - என்று அமைச்சரும், பாதுகாப்புத் தொடர்பான பேச்சாளருமான கெஹலிய ரம்புக்வெல நேற்றுக் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு தேசியப் பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் வைத்தே மேற்கண்டவாறு குறிப்பிட்டார் அவர்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மகேஸ்வரன் எம்.பி. படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துக்கு கவலை கொள்கிறோம். அவரது குடும்பத்துக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் குறித்து தீவிரமாக விசாரித்து குற்றவாளிகளைக் கைது செய்யுமாறு ஜனாதிபதி, பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளார். இதனைத் தொடர்ந்து விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் யாழ்ப்பாணம், குருநகரைச் சேர்ந்த ஒருவர் காயங்களுடன் கைதாகியுள்ளார். இவர் வத்தளையில் வசித்து வந்தவர். சூட்டுக்காயத்துடன் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கும் சந்தேகநபர் விரைவில் குணமடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம். அவருக்குப் பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டிருக் கின்றது. அவரிடம் விசாரணைகள் தொடரும்.

சம்பவ இடத்தில் இருந்து 'மைக்ரோ' பிஸ்டல் கண்டெடுக்கப்பட்டது. இதுவே கொலையாளி பயன்படுத்தியதாகத் தெரிகின்றது. இது புலிகளின் 'பிஸ்டல்' குழு பயன்படுத்தும் வகையைச் சேர்ந்தது. எனவே இந்தக் கொலைக்குக் காரணம் புலிகள்தான்.

நாம் மகேஸ்வரனுக்கு அவரது பாதுகாப்புத் தொடர்பில் பல்வேறு ஆலோசனைகளை வழங்கியிருந்தோம். போக்குவரத்தில் மாற்றம் கொண்டுவர வலியுறுத்தினோம். அவருக்கு யாழ்ப்பாணத்தில்தான் அச்சுறுத்தல் அதிகம். கொழும்பில் குறைவே. அதனால்தான் ஏலவே கொடுக்கப்பட்டிருந்த பாதுகாப்பை பொலிஸார் வாபஸ் பெற்றுக்கொண்டனர். மாறாக யாழ்ப்பாணத்துக்கு மகேஸ்வரன் சென்றபோதெல்லாம் கூடுதல் பாதுகாப்பை அரசு வழங்கியிருந்தது.

கூடுதல் பாதுகாப்பு மகேஸ்வரனுக்கு வழங்கப்பட்டிருந்தாலும் அவரைக் காப்பாற்றியிருக்க முடியும் என்பது சந்தேகமே. 126 பொலிஸார் பாதுகாப்பு வழங்கியிருந்தபோதும் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் படுகொலை செய்யப்பட்டார். 600 பேர் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இருந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸ கொல்லப்பட்டார். - என்றார் அமைச்சர் கெஹலிய.

இவ்வாறான சூழ்நிலையில் முன்னர் கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்களின் கொலை விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து ஊடகவியலாளர் ஒருவர் வினவ, ''ரவிராஜ் கொலைச் சம்பவம் தொடர்பில் சிலர் கைதாகி விசாரணைக்குள்ளாகியுள்ளனர்'' - என்றார் அமைச்சர்.

பாதுகாப்பு 'வாபஸ்' என்ற நிலையில் வெளிநாடு சென்றிருக்கும் மனோ கணேசன் எம்.பி. குறித்துக் கேட்ட போது, ''அவர் பாதுகாப்பு குறித்து பரிசீலிக்கப்பட்டு விரைவில் நல்ல முடிவு அறிவிக்கப்படும்'' - என்றார் ரம்புக்வெல.

பாதுகாப்பு அச்சுறுத்தலைத் தொடர்ந்து மனோகணேசன் எம்.பி. நேற்று முன்தினம் இரவு நாட்டைவிட்டு வெளியேறி விட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(சி)

## ஜி.சி.ஈ. பெறுபேறு வெளியாகியது

யாழ்ப்பாணம்,ஜன.2

கடந்த ஒகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஜி.சி.ஈ.உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று மாலை வெளியாகின.

கொழும்பு மாவட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் நேற்றைய தினமே பரீட்சை திணைக்களத்தில் இருந்து பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்டனர். ஏனைய மாவட்டங்களுக்குரிய பெறுபேறுகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்தார்.

குடாநாடுப் பாடசாலைகளின் பெறுபேறுகள் நாளை வியாழக்கிழமையே கிடைக்கப் பெறும் என்று யாழ்.கல்வி வலய அதிகாரி ஒருவர் கூறினார்.

எவ்வாறாயினும் இணையத்தளத்திலிருந்து நேற்றுப்பிற்பகலிலேயே பரீட்சை முடிவுகளை பெறக்கூடியதாக இருந்தது. (1-2)

## யாழ். நீதிவான் பதவியேற்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவானாக திருமதி ஜோய் மகாதேவா நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

நேற்றுக் காலை 10.45 மணியளவில் அவர் பதவியேற்றார். இவர் வவுனியா மற்றும் கொழும்பில் சட்டத் தரணியாகப் பணியாற்றிய அனுபவம் மிக்கவர். (2)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி - 18 | வியாழக்கிழமை 03.01.2008 |
| திதி : தசமி | மு.ப : 09.21 வரை |
| நட்சத்திரம் : | சுவாதி பிற்பகல் : 01.15 |
| சுபநேரம் | : [illegible] |
| ராகுகாலம் | : 02.00 - 03.30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டெடுக்கப்பட்டது**

யாழ்ப்பாணம்,ஜன.2

யாழ்.தபாலகத்தில் கடந்த வாரம் ஒரு தொகைப் பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிய பின் யாழ்.தபாலகத்தில் அதனை பெற்றுக்கொள்ளமுடியுமென பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார். (2)


**நாவலர்**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**A/L 2010**

**கலை, வர்த்தகப் பிரிவு**
ஆரம்பம்:- 05.01.2008
சனி காலை 8.30 மணி

பொருளியல் N.B.கஜீதரன் | கணக்கீடு P.பகீரதன் | வணிகக்கல்வி V.K.ரவிகரன்
தமிழ் A.Kகீத்திராஜன் | இந்து நாகரீகம் S.பத்மராஜா | புவியியல் N. பாபு
அளவையியல் P.கமல் | அரசியல் A.Kறொபின்சன் | வரலாறு பிரபல ஆசிரியர்
இந்து சமயம் B.மயூரதன் | கிறிஸ்தவம் R.ராஜன் | நா .அரங்கியல் S.மயூரன்
ஆங்கிலம் K.றமணதாஸ்

**கணித, உயிரியல் பிரிவு**
ஆரம்பம்:- 05.01.2008
சனி காலை 3.00 மணி

Chemistry S.வாசு | Physics K.செல்வன்
Com.Maths B.மயூரன்
Biology V.K.ஞானேந்திரன்
A/L Day Class ஆரம்பம் 07.01.2008 திங்கள் 8 am
புதிய அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்



**NEW PHYSICE**
யாழ்.இந்து மகளிர் கல்லூரி முன்பாக
2010 A| L
ஆரம்பம்-02.01.2008
புதன் - 5.00 பி.ப
Tu,Thu-6 am
BY.SASI



**CHEMISTRY**
2010
ஆரம்பம்:-05.01.08
Sat - 6.30 am
N. Vakeesan B.SL
136, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு.
★ அனுமதிகள் வெள்ளி வரை வழங்கப்படும்.
(69589)



**Singapore மற்றும் Malasia வில் பட்டப்படிப்பு**

(இறுதி ஆண்டை U.K/ Australiya பல்கலைக் கழகங்களில் தொடர முடியும்).

- மாணவர்கள் எதிர்பார்க்கும் அனைத்து துறைகளிலும் பல்கலைக்கழக அனுமதியும் Student Visa வும் பெற்றுக் கொடுக்கப்படும்.
- பிரயாண வசதிகள், தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
- பகுதிநேர தொழில் வாய்ப்பு வசதி செய்து கொடுக்கப்படும்.
- IELTS அவசியம் இல்லை.
- நியாயமான கட்டணங்கள் அறவிடப்படும்.
- குறைந்த தகைமை O/L
- O/L கல்வியை Singapore இல் கற்பதன் மூலம் Poly technic இல் இணைந்து Singapore இல் தொழில் வாய்ப்பை பெற முதன்முறையாக சந்தர்ப்பம்.

யாழ்ப்பாணத்தில் 2ஆம் 3ஆம் 4ஆம் திகதிகளில் கீழக் குறிப்பிட்ட முக வரியில் தொடர்புகொள்ள முடியும்.

No. 1 Brown Road, Jaffna.
Institute of Bright Future, Jaffna.
கொழும்பும் தொடர்பு 077 6147174



**விக்னா கல்வி நிறுவனம்**
ஜனவரி 5 ஆரம்பம்
**A/L 2010**
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் 8 மணி சனி.
கிளை நிறுவனம் 417,K.K.S வீதி யாழ்ப்பாணம். 7 மணி சனி.

**கலை,வர்த்தக வகுப்புக்கள்**

| | | |
|---|---|---|
| Eco-திரு.B.கஜீதரன் | Com-திரு.யசோ | Acc-திரு.P.பகீரதன் |
| Log-திரு. கமல் | Tam-திரு. குழந்தை | H/C-திரு.பத்மராஜா |
| Geo-திரு. பாபு | Hin-திரு.N.T.தரன் | Hist-திரு.பத்மன் |
| P/Sci-திரு. றொபின்சன் | Chri-திரு.ஜெயமோகன் | Drama-திரு.திருமயூரன் |

இதுவரை அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்கள் இன்றிலிருந்து அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். (2/54860)



**பழையது கழிவதும் புதியது புகுதலும்**
**MEGA EXCHANGE MELA**

Change as

**உங்கள் பழைய கணினிகளுக்கு புதிய கணினிகள்**
உங்கள் பழைய Pentium II, III and IV கணினிகளுக்கு புதிய Pentium IV கணினிகள்
Also Exchange Crt with New CRT or LCD
Offer valid Upto 12-01-2008
UNIT மனோகரா சந்தி 347, K.K.S Road, Jaffna. ✆4590720,0773134737


# படைக் காவலரண் மீது மணலாறில் தாக்குதல்

கொழும்பு, ஜன. 02

மணலாறுப் பகுதியிலுள்ள படையினரின் காவலரண்கள் மீது நேற்று நள்ளிரவு 12 மணியளவில் தாம் தொடுத்த அதிரடித் தாக்குதலின்போது தாங்கள் அங்கிருந்த 4 காவலரண்களைக் கைப்பற்றியதுடன், அவற்றிலிருந்த படைக்கலங்களையும் கைப்பற்றியிருக்கின்றார்கள் எனறு விடுதலைப் புலிகள் அறிவித்திருக்கின்றனர்.

மணலாறு, கொக்குத் தொடுவாயிலுள்ள இரு காவலரண்கள் மற்றும் சிலோன் தியேட்டர் பகுதியிலுள்ள இரு காவலரண்கள் ஆகியவையே அதிகாலை விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகின என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலின்போது காவலரண்களுக்குள் இருந்த படையினர் இழப்புகளுடன் பின்வாங்கி ஓடினர் என்றும் -

பின்னர் அந்தக் காவலரண்களைத் தாங்கள் கைப்பற்றி சிலமணி நேரம் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர் என்றும் - விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கிறார்கள். (சி)

## அம்பாறையில் கிளைமோர் சிப்பாய் பலி; இருவர் காயம்

அம்பாறையில் விடுதலைப் புலிகளால் நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் படையினர் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதோடு மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அம்பாறை வக்கிமுட்டியாப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 7 மணியளவில் வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினரை இலக்கு வைத்தே இந்தக் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. (சி)


**BRAIN POWER INSTITUTE**
(சின்னக்கடை சந்தை அருகில்)
**A/L 2010** கலை, வர்த்தக, கணித, விஞ்ஞானப் பிரிவுகள்.

| கலைப்பிரிவு | வர்த்தகப் பிரிவு |
|---|---|
| தமிழ்: திரு.ஜனகன் | கணக்கீடு: திரு.பாலகஜன் |
| புவியியல்: திரு.ஜெயகணேஸ் | பொருளியல்: திரு.கஜீதரன் |
| அளவையியல்: திரு.அமிர்டன் | வணிகக்கல்வி: திரு.சசி |
| கிறிஸ்தவம்: திரு.அஜந்தன் | விஞ்ஞானப்பிரிவு |
| அரசியல்: திரு.ரஞ்சித் | இரசாயனவியல்: திரு.நிரேஜன் |
| நாடகம் அரங்கியல் : திரு.மயூரன் | பௌதீகவியல்: திரு.ஸ்பென்சன் |

யாழ் நகரில் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர் குழாம்
ஆரம்பம்
04/01/2008 - வெள்ளி மாலை 3.30
(நேர அட்டவணையை அலுவலகத்தில் பெறலாம்)



**A/L 2010**
கலை, வர்த்தகப் பிரிவுகள்
ஆரம்பம்
05/01/2008 சனி
தனிப்பட்ட அனுமதிகள் வழங்கப்படும்
**யூனிவேர்சல்**
(யாழ்/ இந்து மகளிர் கல்லூரி அருகே)



**BEACON**
2010 கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்
05.01.2008
சனி காலை 8.00 மணிக்கு
DAY CLASS ஆரம்பம்:- 07.01.2008 திங்கள் காலை 7 மணிக்கு
Proparitor:- N. Poobalasingam.



AL மாணவர்களுக்கு யாழ் முன்னணி ஆசிரியர்களின் சேவை விஸ்தரிப்பு
**A/L 2010**
கலை, வர்த்தக வகுப்புக்கள்
ஆரம்பம்
05/01/2006 சனி காலை 8.00
அமைதியான சூழலில் உயர்வான கல்வியைப் பெற்றிட அனுமதியை உடன் பெற்றுக் கொள்ளவும்.
கடந்த பல ஆண்டுகளாக யாழ். முன்னணியில் உள்ள ஆசிரியர் ஒருங்கிணைந்த சேவையில்
யாழ் கல்வி நிலையம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
யாழ் கல்லூரி, கேணியடி, கொக்குவில் மேற்கு, கொக்குவில்.



**Diploma in Computerized Accounting**
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள Accounting Software களினூடாக Network டனான கணக்குப்பதிவு முறைகளுடன்......
ACCPAC + Quick Books Premier + MYOB
வகுப்புக்கள் ஆரம்பம்.
Batch I: 05/01/2008, Batch II: 06/01/2008
02.00 - 03.00
COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna
Branch : #167, Kasthuriyar Rd, Jaffna.
PHONE: 021 222 8257, 0777 224 122


## கண்ணீர் அஞ்சலி

எமது இணைப்பாளராக கடமையாற்றும் திரு.கி.கந்தசாமி அவர்களின் அன்புச் சகோதரர்

### அமரர் கிருஷ்ணப்பிள்ளை நடராசா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்ம சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*திட்டப் பணிப்பாளரும் அலுவலர்களும், புனர்வாழ்வு,புனரமைப்புச் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.*

## மரண அறிவித்தல்கள்

### செல்வன் அல்பேட் செபஸ்ரியர் அருள்ஜோதீஸ்வரன்

*(தரம் 10 மாணவன், புனித கென்றியரசன் கல்லூரி - இளவாலை)*



பத்தாவத்தை, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் அருள் ஜோதீஸ்வரன் 29.12.2007 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் ஜோசப் அல்பேட் செபஸ்ரின் (களஞ்சியப் பொறுப்பாளர் - இலங்கை சிமெந்து கூட்டுத்தாபனம், உரும்பிராய்)-யமுனாவதி (செல்வாவல்வெட்டித்துறை) தம்பதியினரின் புதல்வனும், நிறோயினி, வினோயன், நிதர்சனா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (02.01.2008) பி.ப 1 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் போயிட்டி சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பத்தாவத்தை, இளவாலை.*

தகவல்: குடும்பத்தினர்

### ஜோன் பூபதி (அன்னம்மா)



உயரம்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஜோன் பூபதி (அன்னம்மா) 01.01.2008 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மத்தேஸ்ஜோன் அவர்களின் மனைவியும், பிரபாவதி, பெனடிக்ற் குணசேகரம் (மக்கள்வங்கி, யாழ்பல்கலைக்கழககிளை), அன்ரன், இராசுகுமார் (கனடா), பரமேஸ்வரி (கனடா), பத்மாவதி (கனடா), சாந்தகுமார் (கனடா), அருந்ததி (கனடா), ஜெயக்குமார் (ஜேர்மனி), காந்திமதி ஆகியோரின் தாயாரும், பிரான்சிஸ் (புகையிரதத் திணைக்களம், திருகோணமலை), இராசபுத்திரி, மேரி பொன்மலர் (கனடா), ஜெயராஜ் (கனடா), அல்பிரட் (கனடா), மஞ்சு (கனடா), டெறிக்சாந்தகுமார் (கனடா), பேபி (ஜேர்மனி), கருணவேல் (திருகோணமலை) ஆகியோரின் மாமியாரும், றெயினோல்ட், றெமிஜியா, றெனோஜன், டினேஸ், அனற், ஏரன், சிந்துஜா, ஜெனா, சுஜி, சுகிர்த்தா, லிண்டா, சசிதனா, சபரினா, நகுலன், கம்சவி ஆகியோரின் பேர்த்தியும், சாம்சன், சானுஜா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (02.01.2008) புதன்கிழமை மாலை 3 மணிக்கு ஆனையூர் புனித அடைக்கலநாயகி ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அடைக்கலநாயகி சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*உயரப்புலம், ஆனைக்கோட்டை. தொ.பே: 021-222 3904*

தகவல்: J.B.குணசேகரர்

### பரமேஸ்வரக் குருக்கள் காயாரோகணசிவக்குருக்கள்

(யாழ்.போதனாவைத்தியசாலைஆவரைவைரவர் கோயில் குருக்கள்)



திருநெல்வேலியைச் சேர்ந்த பரமேஸ்வரக் குருக்கள் காயாரோகணசிவக்குருக்கள் நேற்று சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமேஸ்வரக் குருக்கள் (தம்பிமுத்துக்குருக்கள்)-இராசம்மா தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற நீலாயதாட்சி, புட்கலா ஆகியோரின் சகோதரனும், சரஸ்வதியின் கணவரும், சிவப்பிரிஜா, பிரிஜா, சிவாஜினி ஆகியோரின் தந்தையும், பரமேஸ்வரன், முரளிதரன், ரகுநந்தன் ஆகியோரின் மாமனும், அஸ்வினி, அபிஷன், சனகன், சரீனா ஆகியோரின் பேரனும், மகாலிங்கத்தின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2008) மு.ப 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சமாதிக் கிரியைக்களுக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*40/2, மாரியம்மன் வீதி, திருநெல்வேலி.*

தகவல்: சரஸ்வதி (மனைவி)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.01.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org